விலை ரூபா 1-25

# ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

மலர் 18 ஆவணி 11 துல்ஹஜ் 20 இதழ் 198

யாழ்ப்பாணம் புதன்கிழமை 27-8-1986

## கனடா சென்ற அகதிகளுக்கு தொழில்புரிய அரசு அனுமதி! 50 பேருக்கு தற்காலிகவேலை

ஒட்டாவா, ஆக 26 கனடாவில் தஞ்சமடைந்துள்ள 155 தமிழ் அகதிகளுக்கும் அங்குதொழில் செய்வதற்குரிய அரசஅனுமதிகிடைத்துள்ளது. இவர்களில் 50 பேருக்கு தற்காலிக வேலை வாய்ப்பும் தேடிவந்துள்ளது

கனடாவில் உள்ள தமிழ்ச் சமூகங்கள் கனடிய தொலைக்காட்சியில் விடுத்த வேண்டுகோளை அடுத்தே இந்த தற்காலிகவேலைவாய்ப்புகள் கிடைத்துள்ளன.

இந்த 155 பேரில் 61 பேர் ரொறன்ரோ நகருக்கும், 93 பேர் மொன்றியல் நகரத்திற்கும் அனுப்பப்பட்டுள்ளனர் சுகவீனத்துக்குள்ளான ஒருவர் நியூ வுண்லாந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இவ்விரு நகரங்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளதமிழர்களுக்கு அங்குள்ளதமிழ்ச் சமூகம் தற்காலிக வீட்டுவசதிகளை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

அகதிகளாகத் தஞ்சம் புகுந்த 155 பேரும் கனடாவில் அகதிகள் அந்தஸ்துக்குக்கோருவார்கள்என்றும் அவ்வந்தஸ்து வழங்கப்பட்டால் அவர்கள் கனடியப் பிரஜைகளாகக் கணிக்கப்படும் தகுதியைப் பெறுவர் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. (கூ-வா)

● பிரேத அடக்கத்தில் பங்குபற்றிய

# பொதுமக்களில் ஒன்பது பேர் படையினரால் சுட்டுக் கொலை

## மட்டு. பிரஜைகள்குழு ஜனாதிபதிக்கு புகார்

(மட்டக்களப்பு நிருபர்)

**மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள புதுக்குடியிருப்பு - கிரான்குளம் மயானத்தில் பிரேத அடக்கமொன்றில் பங்குபற்றிய பொதுமக்களில் 9 பேர் ஆயுதப்படையினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு பலியானார்கள்.**

நேற்று முன்தினம் மாலை இப் பயங்கரச் சம்பவம் இடம் பெற்றது

மயானத்தில்சுட்டுக்கொல்லப்பட்ட 9 பேரின் சடலங்களையும் அதிரடிப்படையினர் களுவாஞ்சிக்குடி முகாமுக்குக் கொண்டு சென்று எரித்துவிட்டனர்.

இச்சம்பவத்தை கேள்வியுற்ற மட்டக்களப்பு பிரஜைகள் குழு அப்பகுதிக்கு நேற்று விஜயம் செய்தபோது அவ்வூர் பொது மக்களும், கொலை செய்யப்பட்டவர்களின் உறவினர்களும் சம்பவம் பற்றி எடுத்துக் கூறினார்கள்.

மட்டக்களப்பு தென் பகுதியை பெரும் பரபரப்பிலும் சோகத்திலும் ஆழ்த்தியுள்ள இச்சம்பவம் பற்றி அறியப்படுவதாவது:-

கிரான்குளத்து வாசி ஒருவரின் பிரேதம், குறிப்பிட்ட மயானத்தில் அடக்கம் செய்யப்பட்டு கருமங்கள் நடைபெற்ற சமயம் அங்கு சென்ற அதிரடிப்படையினர் பிரேத அடக்கத்தில் பங்கு பற்றியவர்களில் 9 பேரைப் பிடித்து அருகாமையில் உள்ள காட்டுப் பகுதிக்குள் இழுத்துச் சென்றனர்.

பின்னர் காட்டுப்பகுதிக்குள் அடுத்தடுத்து துப்பாககிவேட்டுக்கள் கேட்டவண்ணமிருந்தன இதனால் மயானத்தில் கூடியிருந்த மக்கள் பீதியடைந்து தங்கள் கிராமத்தை நோக்கி ஓடினர்.

காட்டுக்குள் இருந்து குற்றுயிரும் குறை உயிருமாகக் கிடந்த 9 பேரையும் தங்கள் வாகனத்தில் ஏற்றி அவற்றை மற்றவர்கள் கண்களுக்குத் தெரியாதவாறுமூடிக்கொண்டு களுவாஞ்சிக்குடி முகாமுக்கு படையினர் விரைந்தனர். அன்றிரவே அந்த 9 பேரும் முகாமுக்குள் வைத்து எரிக்கப்பட்டனர்.

இச்சம்பவம் குறித்து பூரண

[4ம் பக்கம் பார்க்க]

## படையினர் சுட்டு நால்வர் படுகாயம்

யாழ்ப்பாணம், புதன் வயலில் அறுவடைசெய்த நெல்லை விற்பனைசெய்துவிட்டு தமதுவானில் வீடுதிரும்பிக் கொண்டிருந்த 5விவசாயிகளில் நால்வர் ஆயுதப்படையினரின் துப்பாக்கிச் சூட்டுக்கிலக்கானார்கள். இவர்களின் வானும்முற்றாகச் சேதப்படுத்தப்பட்டதுடன் நெல் விற்ற பணமான22, 760 ரூபாயையும் பறித்துக்கொண்டுவிட்டனர்.

நேற்றுமுன்தினம் பிற்பகல் முறிகண்டி முதலாம்கட்டைப் பகுதியில் இச்சம்பவம் இடம் பெற்றது.

இச்சம்பவம்பற்றிக்கூறப்படு

(4ம் பக்கம் பார்க்க)

## கண்ணிவெடியில் சிலர் பலி!

[மட்டக்களப்பு நிருபர்]

மட்டக்களப்பு தாளங்குடாப் பகுதியில் இடம் பெற்ற கண்ணிவெடித்தாக்குதலில் ஆயுதப்படையைச் சேர்ந்த சிலர் கொல்லப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது

நேற்று மூன்தினம் காலை இத்தாக்குதல் சம்பவம் இடம் பெற்றது. [மா]

வெள்ளிக்கிழமை இறுதி சந்திப்பு:

## "முடிவெதுவும் எடுக்கப்படும் என நம்பவில்லை" - 'அமிர்'

[கொழும்பு]

அரசாங்கத்திற்கும் தமிழர் விடுதலைக் கூட்டணியினருக்குமிடையிலான ஆறுவது சுற்றுப் பேச்சுவார்த்தைகள் நேற்றுக்காலைபண்டாரநாயக்க சர்வதேசமாநாட்டு மண்டபத்தில் ஆரம்பமானது.

சுமார் இருமணிநேரமாக நடைபெற்ற இப்பேச்சு வார்த்தைகளின்போது ஜனாதிபதியுடன் நிதி மைச்சர் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர், தேசிய பந்தோபஸ்து அமைச்சர் ஆகியோரும் பங்கு பற்றினார்கள்.

அரசியலமைப்பில் அதிகாரத்தைப் பரவலாக்குதல் பற்றிய விடயங்கள், மாகாண சபைகள் அமைப்பதற்கு அரசியல் யாப்பில் திருத்தங்களைச் செய்தல் சட்டமும் ஒழுங்கும் பற்றிய சில விஷயங்கள் பேச்சு வார்த்தைகளின்போது பரிசிலனை செய்யப்பட்டதா

(4ம் பக்கம் பார்க்க)

ஆகஸ்ட் முதல் 25 நாளில்

## வடக்கு, கிழக்கு பகுதிகளில் 106 தமிழர் படுகொலை

(நமது நிருபர்)

ஆகஸ்ட்முதலாம்திகதிதொடக்கம் நேற்றுவரை 106 அப்பாவித்தமிழர்கள் ஆயுதப்படையினரின் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியாகியுள்ளனர்.

யாழ்.மாவட்ட பிரஜைகள் குழுவின் இணைப்புக்குழுஅமைப்பாளர் திரு எஸ் சிவானந்தராஜா இத்தகவலை வெளியிட்டுள்ளார்.

யாழ் மாவட்டம் 21, கிளிநொச்சி 07, மன்னார் 03, வவனியா 08, முல்லைத்தீவு 01, திருமலை 27, மட்டக்களப்பு 37, அம்பாறை03 வெளிமாவட்டமான அநுராதபுரத்திலும் 03 தமிழர்கள் கொல்லப்பட்டுள்ளனர். (ம)

புதிய யோசனைகள்

## "சகலரையும் பாதுகாக்கும் நியாயமான யோசனைகள்" அமைச்சர் 'லலித்'

கொழும்பு. செவ்.

"மாகாணசபைகளை அமைப்பதற்கான ஆலோசனைகள் இலங்கையிலுள்ள சகல சமூகங்களின் நலன்களையும் பாதுகாப்பதற்குரிய நியாயமான தீர்வாக இருக்குமென அரசாங்கம் உணர்கின்றது".

இவ்வாறு கொழும்பில்நடைபெற்ற கருத்தரங்கொன்றில் பேசிய தேசிய பாதுகாப்பு அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலி கூறினார்.

4ம் பக்கம் பார்க்க)

### மக்கள் ஏற்கவில்லை

கிளிநொச்சி, செவ்வாய் அகதிகளாகச் சென்றவர்களை உடனடியாக கிளிநொச்சிக்குத் திரும்பும்படி இராணுவநிர்வாகம் அழைப்புவிடுத்த போதும் அவர்களின் கோரிக்கைகளை மக்கள் ஏற்கவில்லை (இ)

## வல்வை முகாமில் வெள்ளைக் கொடிகள்! சூட்டுச் சத்தங்களும் இல்லை

வல்வெட்டித்துறை, செவ்வாய்.

வல்வெட்டித்துறை இராணுவ முகாமில் இப்பொழுது வெள்ளைக் கொடிகள் பறக்கவிடப்பட்டுள்ளன. இராணுவத்தினரின் இத்திடீர்ச் செயல் அப்பகுதி மக்களுக்குப் புரியாத புதிராக உள்ளது.

இவ்வாறு வெள்ளைக் கொடிகள் பறக்கவிடப்பட்டதன் பின்னர் கடந்த நான்கு நாட்களாக இம்முகாமிலிருந்து துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்களோ, 'ஷெல்' தாக்குதலோ மேற்கொள்ளப்படவில்லை.

பலத்த வெடிச் சத்தங்களைத் தினமும் கேட்டுப் பீதியடைந்திருந்த மக்கள் கடந்த நான்கு தினங்களாக நிம்மதியாக வாழ்ந்துவருவதாகத் தெரிய வருகிறது. (ஓ)

## இன்று கோட்டை முகாமை அகற்றக் கோரி ஊர்வலமும் கடையடைப்பும்

யாழ்ப்பாணம், புதன் யாழ் கோட்டை இராணுவ முகாமை அகற்றக்கோரிஇன்று புதன்கிழமை மக்கள் நடவடிக்கைக்குழு நடாத்தவுள்ள மாபெரும் ஊர்வலத்தில்சகல பொதுமக்களையும் கலந்து கொள்ளச்செய்யுமாறு மனித உரிமைகளுக்கான வெகுஜன இயக்கம் தனது கிளைகள் அனைத்தையும் கேட்டுள்ளது.

இதேவேளை இவ்வூர்வலத்தில் யாழ்வகுப்பு தொழிலாளர்சங்கமும் கலந்துகொண்டு பூரண ஒத்துழைப்பு வழங்க இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இன்றைய ஊர்வலத்திற்கு ஆதரவுதெரிவித்து சகலவர்த்தக நிலையங்களையும் பூட்டுமாறு யாழ் வர்த்தகர் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

மைசூர் அரிசி நம்பர்-1 கல்லில்லாதது, சுத்தமானது, தரமானது சுவையானதும்கூட. கைதேர்ந்த தொழிலாளர்களால் இயந்திரமூலம் சிறந்த முறையில் தயாரிக்கப்பட்டது. உங்கள் சகலதேவைகளுக்கும் எங்கும் கிடைக்கும் மைசூர் அரிசியையே கேட்டு வாங்குங்கள். ஒருமுறை பாவித்தால் உண்மை விளங்கும் தயாரிப்பாளர்-மைசூர் அரிசி ஆலை, மானிப்பாய். C 4200

மானிப்பாய் மேற்கில் வீடும், வளவும், வெறும்காணியும் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு ஜீவன் ரவல்ஸ், 9 00-12 00 மணிவரை யாழ் பஸ் நிலையத்திற்கு முன்பாக நவீன சந்தை, மேல்மாடி. [C4199]

E L Morris Minor கார் ஒன்று விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்க: 263, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். C 4277

புதிய வெளிநாட்டு குளிர் சாதானப்பெட்டிகள், புதிய Deep Freezer Celling Fans, Gas and Electric Cooker with Oven, Chopper Bike. தேக்கு அலுமாரிகள், கடை அலுமாரிகள். சுவர் மணிக்கூடுகள். Kenwood Chief றேடியோ கசட்டுக்கள், Three in One Radio. Blender, Projector, Washing Machine, Dressing Tabe, மின்சார சிங்கர் தையல் மெசின், Iron Safe மற்றும் பல பொருட்கள் விற்பனைக்குண்டு S. பத்மநாதன், திருநெல்வேலி வடக்கு. (திருநெல்வேலிச் சந்திக்கும் மருத்துவக் கல் கல்லூரிக்கும் இடையில்) (C 4279)

### சேவை

Transformers - டெக், ரீவி, றேடியோ, பற்றறிசாயர் வெல்டிங் சகல ரான்ஸ்போமர்களும், கிறையிண்டர்களும் உத்தரவாதத்துடன் றீவைண்டிங் செய்யப்படும். Omega, Manipay Road, Jaffna. (ஈழநாட்டிற்கு எதிரில்) C 4271

தரமான தெளிவான போட்ரோஸ்ரற் பிரதிகள், றோணியோ பிரதிகள் தமிழ்-ஆங்கில ரைப்பிங் வேலைகளுக்கு: கிளீன்கட், இல; 239, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி இல; 22823. (C4234)

இதோ எம்மிடம் எல்லாச் சாதி சமயத்திலும் டொக்டர் எஞ்சினியர். எக்கவுண்டன்ற் ஆசிரியர் சிறு தொழில் புரிவோர் ஆண், பெண் மணமக்கள் இருக்கிறார்கள். மங்கள ஏஜென்சி கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம். C 4224

வன்செயலாலும் வசதியின்மையாலும் நகரத்தின் மத்தியில் இருந்து இயங்க முடியாமல் இருக்கும்ஸ்தாபனங்களுக்கு முழுச் சேவையும் நாமே வழங்கி வருகிறோம். தொடர்பு கொள்ளவும். Sarto Group, 198, Kasthuriar Road, Jaffna. C 4267

**FOR SALE**

Typewriters: Standard - Ad er 15'', Remington 15'', 21'' Portab'es - Remington, Olympia Olivetti, Brother, Smith Corana for Sale: Contact: Fudo Enterprise. 39/17, Power House Road, 3rd Lane, Jaffna. C 4270

### வகுப்புகள்

A/L பரீட்சை எழுதியவர்கட்கு அரிய சந்தர்ப்பம் புதிய தொழில்நுட்ப வகுப்புகளான Electronic Engineering, Radio and T. V. (Antenna, Deck) வெல்டிங், வயறிங். மோட்டார் மெக்கானிசம், மோட்டார் வைன்டிங், தட்டெழுத்து, சுருக்கெழுத்து ஆரம்பமாகவுள்ளன. சான்றிதழ் பெறுமதியானது. வெளிநாடு செல்பவர்கட்கு விரைவில் Courses முடிக்கப்படும். Vispa Engineering Aid Hall (ஆனைப்பந்திச் சந்திக்கு அண்மையில்), 328, நாவலர் வீதி. யாழ்ப்பாணம். (C 4247)

### தேவை

ஷேக்ஸ்பியரின் நாடகங்கள் பற்றித் தமிழில் வெளிவந்த நூல்கள் தேவை. விலை விபரங்களுடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல: A 1189 ஈழநாடு, யாழ்ப்பாணம். A 1189

யாழ் இந்து மகளிர் கல்லூரிக்கு அண்மையில் சிறு குடும்பமொன்றுக்கு வீடு வாடகைக்குத் தேவை. Annex ஆயினும் விரும்பத்தக்கது. க கனகசிங்கம், 411/1, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி; 23853 (C 4276)

கிளிநொச்சியில் ஆரம்பிக்கப்படும் தனியார் பெண்கள் பாடசாலைக்கு பகுதி முழு நேர விஞ்ஞான, ஆங்கில, தமிழ் பெண் ஆசிரியர்கள் தேவை குறைந்த தகுதி A/L மூன்று பாடம் இருப்பிட வசதி உண்டு. விளம்பரஇல: C 4244 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். C 4244

**A/L 87**

**தூய பிரயோககணிதம்**

பகல் நேர வகுப்பு

**ஆரம்பம்: 5-9-86**

10-30: காவிகள்

11-45: அட்சரகணிதம்

ஆசிரியர்: ரவிமோகன்

யாழ்ப்பாணம்.

(வெலிங்டன் சந்திக்கும் பெருமாள் கோவிலுக்கும் இடையில்)

C 4273

## ஓராண்டு நினைவஞ்சலி



அமரர்

திரு. கணபதிப்பிள்ளை சிவராசா

(நடத்துநர், இ. போ. ச.)

தோற்றம்: 06-10-1941

மறைவு: 07-09-1985

எம் குடும்பம் தன்னை ஒளிவீச வைத்த ஒளி விளக்கே, எம்மையெல்லாம் கண்போல் காத்து வந்த கண்மணியே கற்பகமே, என் கண்நிறைந்த கணவராய் பாசத்தின் ஒளிச்சுடராய், அன்புச் செல்வங்களை மருமக்களை அரவணைத்து அமுதூட்டி வளர்த்துவந்த அன்புத் தெய்வமே சகோதரர்க்கு சகோதரராய் மைத்துனர்க்கு மைத்துனராய் எங்கள் மனங்குளிர வைத்து நல்வழி காட்டிய பெருந்தகையே, தெய்வத் தொண்டே திருத்தொண்டாய் நினைத்த தெய்வத் திருமகனே, எத்தனை ஆண்டுகளானாலும் தங்கள் பிரிவால் துயருறும் எம்மை ஆற்றமுடியாது. எங்கள் உயிரே தங்களைப் பிரிந்து ஓராண்டு ஆகிய இன்று உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். இங்ஙனம்

தங்கள் பிரிவால் துயருறும்:

அன்புமனைவி, பிள்ளைகள், மருமக்கள், மைத்துனர்கள், சகோதரிகள்.

தனலட்சுமி வாசம், 7-ம் வட்டாரம், பண்டத்தரிப்பு. (C 4254)

கலர் பிலிம் சுருள்களை PROCESSING+PRINTING செய்வதற்கு கொழும்பு ஸ்ருடியோ (A 1041)

## போராளிக்கு அஞ்சலி

யாழ்ப்பாணம், புதன் கோட்டை இராணுவ முகாமிலிருந்து வெளிவந்த கடந்த ஞாயிறு இராணுவத்தினருடன் நேரடிச்சமரின் போது படுகாயமடைந்த தமது இயக்கப்போராளியான பொம்மை வெளியைச் சேர்ந்த உஸ்மான் (கிழங்கு) நேற்று முன்தினம் நண்பகல் வீர மரணமடைந்துள்ளதாக தமிழீழ விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளன.

இவர் கோட்டை இராணுவ முகாமைச்சுற்றியுள்ள தமது காவல் அரண்களுக்குப் பொறுப்பாகக் கடமையாற்றியவர் என்றும் அவருக்கு தமது வீர வணக்கத்தை தெரிவித்துக் கொள்வதாகவும் விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ளனர்.

## 90-ம் நாள் நினைவஞ்சலி



செல்லையா தவராசா (பாக்கியன்)

(கருவேலங்கண்டல் கையற்ற ஒரு காளை)

மலர்வு: 05-12-1953

உதிர்வு: 15-05-1986

வீரவிளக்காய் எங்கள் குடும்பத்தில் ஒளி தந்த வீரா, எங்களை இருளில் தவிக்கவிட்டு இறைவனிடம் சேர்ந்தாய். உன் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறோம். உன் நினைவால் துயருறும்:

மனைவி, பிள்ளைகள், அப்பா, அம்மா, சகோதர, சகோதரிகள்.

கருவேலங்கண்டல், ஒட்டுசுட்டான். (C 4127)

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

## தடுத்துவைப்பு

(வவனியா நிருபர்)

மாங்குளம் இராணுவ முகாமில் ஒரு தனியார் பஸ்ஸூம், இரு லொறிகளும் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (மா)

## அந்தியேட்டி அழைப்பும் ஆறும் மாத நினைவஞ்சலியும்



அமரர்

நாராணபிள்ளை புஷ்பாகரன்

அன்னை மடியில்: 14-10-1955

அம்பாள் அடியில்: 03-03-1986

அலைகடல் மத்தியில் அமர்ந்திருக்கும் நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலயத்தில் அருட்பணி ஆற்றிவரும் நாளில் எம்மை விட்டு மாயமாய் மறைந்த மணிவிளக்கே! பண்பின் சிகரமாய்பாசத்தின் உறைவிடமாய் அன்புத் தெய்வமாய் எமது குடும்ப ஒளிவிளக்காய் வாழ்வின் வழிகாட்டியாய் எம்மை வாழ வைத்த அருமை மைந்தனே!! உங்கள் திடீர் மரணம் எம்மை ஆறாத் துயரில் ஆழ்த்திவிட்டது. உங்கள் ஆத்மா சாந்தியடைய வேண்டுமென நயினை நாகேஸ்வரியின் பாதார விந்தங்களைப் பிரார்த்திக்கின்றோம். உற்றார், உறவினர், நண்பர்கள், அன்பர்கள் அனைவரையும் 27-08-1986 புதன்கிழமை நயினாதீவில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்,

பிரிவால் துயருறும்,

தந்தை, தாய், பேர்த்தி, தம்பிமார், தங்கைமார், உறவினர்கள்.

C 4282

பாதுகாப்பான சூழலில் தொழிற்கல்வி

2-வது பிரிவு ஆரம்பம் 30-08-86, 9-00 A.M.

★ COMPUTER PROGRAMMING

**BASIC LANGUAGE**

(Full Course)

இறுதிப் பரீட்சையில் திறமைச்சித்தியடையும் முதல் மூவருக்கு மேற்படிப்புக்கான இலவச அனுமதி வழங்கப்படும்.

DURATION:- 5 MONTHS. FEES:- 1250/-

★ Radio and T. V. Repairing.

★ Wiring.

★ Civil Draughtsmanship.

★ Mechanical Draughtsmanship

(எமது நிறுவனத்தில் மட்டும் ஆரம்பமாகிறது.)

மேலதிக விபரங்கட்கு:

**ABLE TECHNICAL STUDIES,**

K. K. S. ROAD, CHUNNAKAM.

(சுன்னாகம் சந்தியிலிருந்து 150 யார் வடக்கே.)

(C4256)

வங்கிக்கே காவலனாய் இருந்து,
வாடிக்கையாளர்க்கு
வழிகாட்டினாயே
உன் புன்சிரிப்பை
எங்கே காண்போம்,
கதறுகிறது நெஞ்சம்.

## எமது கண்ணீர் அஞ்சலி

மறைந்த யாழ். ஹற்றன் நஷனல் வங்கி எமது முகாமையாளர்,

அமரர் எஸ். சூரியகுமாரனது மறைவினால் துயருறும்,

**கே. ஆர். சிவலோகநாதன்,**

6, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

போன்: 24289.

(C 4272)

## மணிவாக்கு

சர்வாதிகாரிகள் எப்போதுமே நன்ருய்த்தான் இருப்பார்கள், கடைசி பத்து நிமிடங்கள் வரைக்கும்.

— ஜான் மஸாரிக்.

## நமது நோக்கு

# பெனுஸிர் பூட்டோவுக்கும் அதே கதிதானு?

ஜனநாயகத்தின் பேரால் இங்கு நடந்து கொண்டிருக்கும் அன்ருட அட்டூழியங்களைப் பார்த்துக்கொண்டிருக்கும் நமக்கு இன்றைய இலங்கை அரசின் நல்லதொரு நட்பு நாடான பாகிஸ்தானில் இடம்பெறும் சம்பவங்களும் கவனத்தை ஈர்ப்பனவாகவே இருக்கின்றன.

ஜனநாயகத்துக்கு குழி தோண்டிப் புதைத்துவிட்டு பதவிக்குவந்த அந்த நாட்டு ஜனுதிபதி ஸியாவுல் ஹக்கின் அரசாங்கம் இப்பொழுது மக்கள் எழுச்சிக்கு முகம்கொடுக்கமுடியாமல் தடுமறுகின்றது.

என்னதான் ராணுவத்தின் பலம் இருந்தபோதிலும் மக்கள் ஆதரவு இன்றி ஆட்சியில் தொடர்வது இந்தக்காலத்தில் அவ்வளவு இலகுவான காரியமல்ல என்பதைப் பாகிஸ்தான் சம்பவங்கள் எடுத்துக் காட்டுகின்றன.

கடந்த 13ம் திகதி பாகிஸ்தானின் 39வது சுதந்திர தினத்தையொட்டி கராச்சியில் செல்வி பெனுஸிர் பூட்டோ நகழ்த்திய சொற்பொழிவையடுத்து ஆறு நாட்கள் அங்கு இரத்தக் களரிகள் தொடர்ந்து நடைபெற்று சுமார் 40 பேர் வரை பலியாகியுள்ளனர். இதையடுத்து பாகிஸ்தான் மக்கள் கட்சித் தலைவர் செல்வி பூட்டோவும் வேறு எதிர்க்கடசித் தலைவர்களும் கைதுசெய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப் பட்டுள்ளனர்.

செல்வி பூட்டோவின் தந்தை சுல்பிகார் அலி பூட்டோ 1977ம் ஆண்டு ஜெனரல் ஸியாவினுல் பதவி நீக்கம் செய்யப்பட்டு 1979ம் ஆண்டுதூக்கிலிடப்பட்டார் அதே நிலைமை செல்வி பூட்டோவுக்கும் ஏற்படுமோ என்ற அச்சம் இன்று பலவட்டாரங்களில் தோன்றியுள்ளது

ஜனுப் பூட்டோவுக்கு மரணதண்டனை நிறைவேற்றப்படுவதை அன்று உலகத் தலைவர்கள் பலர் எதிர்த்தார்கள்; மன்னிக்கும்படி வேண்டுகோள் விடுத்தார்கள். ஜெனரல் ஸியா செவிமடுக்கவில்லை. இன்று செல்வி பெனுஸிர் மீதும் அவரைச் சார்ந்தவர்கள்மீதும் இராஜதுரோகக் குற்றச் சாட்டுகளைக் கொண்டுவர முயற்சி நடக்கிறது. இக்குற்றச் சாட்டுக்களை நீதிமன்றம் ஏற்றுக்கொண்டால் செல்வி பெனுஸிருக்கும் ஏனைய 8 தலைவர்களுக்கும் ஆயுள்கால சிறைத்தண்டனை விதிக்கப்படலாம்.

இன்று பதவியிலுள்ள ஜெனரல் ஸியாவின் 'பொம்மை' ஆட்சியாளர்களுக்கு எதிராகவும் ஜெனரல் ஸியாவுல் ஹக்கை பதவியிலிருந்து இறக்கவுமென பாகிஸ்தான் எதிர்க்கட்சிகள் செப்டம்பர் 20-ம் திகதிமுதல் பெரும் எடுப்பில் போராட்டம் ஒன்றினை ஆரம்பிக்கத் திட்டமிட்டுள்ளன. 1990ம் ஆண்டுக்கு முன் பொதுத் தேர்தலை நடத்தமுடியாதுஎன்று பிடிவாதமாக இருக்கும் ஜெனரல் ஸியாவின் திட்டத்தைத் தவிடுபொடியாக்கும்விதத்தில்இந்தப்போராட்டம் அமைந்துவிடலாம் என்பதால்அப்போராட்டத்தின் முக்கியஸ்தர்களான செல்வி பூட்டோ முதலியவர்களை நிரந்தரமாகச் சிறையிலடைத்துவிட ஜெனரல்ஸியா திட்டமிடக் கூடும்.

அண்மையில் புனித மெக்காவுக்கு யாத்திரை சென்று திரும்பியுள்ள அதிபர் ஸியா சவூதி பத்திரிகையொன்றுக்கு அளித்துள்ள பேட்டியொன்றில் அவரது இந்த எண்ணம் தொனிக்கின்றது. 'எந்த ஒரு நாகரிக நாட்டிலும், சட்டத்தை மீறுபவர் எவ்வளவு முக்கியமானவராளுலும், எந்த வித அந்தஸ்த்துடையவராஞலும் தண்டிக்கப் பட்டேயாக வேண்டும்'' எனக் கூறியுள்ளார் அவர்.

எதுவாளுலும் ஜெனரல் ஷியாவின் ஆட்சிக்கு நெருக்கடி ஏற்பட்டுப் பலகாலம். அதனைச் சமாளிக்கவே கடந்த டிசம்பரில் ராணுவ ஆட்சியை மாற்றி ''பொம்மை'' ஆட்சியொன்றை ஏற்படுத்தினர். நெருக்கடி இன்னும் பலத்து விட்ட நிலையில் என்ன செய்வார் என்றுஇப்போது சொல்ல முடியாது.

'சூடுகண்ட பூனை' யின் நிலையில் தமது ராணுவப் பிடிகளை தளர்த்தப்போகிருரா! அன்றில் ''ருசி கண்ட பூனை'' என்ற நிலையில் மீண்டும் ராணுவ ஆட்சியை ஸ்திரமாக்கப் போகிருரா என்பது அடுத்துவரும் நாட்களில் தெளிவாகிவிடும்.

# இன்று கிருஷ்ண ஜயந்தி வைணவத்தின் சிறப்பு!

வைதிக மதங்களுள் ஒன்ருகிய வைணவ மதத்தைப் பற்றி இங்கு கூறுவோம் வைணவ மதம் அல்லது ஸ்ரீவைணவ சம்பிரதாயம் என்பதே வைணவம் எனப்படுகிறது இதனை இராமாநுச மதம், இராமாநுச சம்பிரதாயம், எம்பெருமாஞர் தரிசனம் என்கின்ற பெயர்களாலும் வழங்குவதுண்டு. இதஞல் எம்பெருமாஞர் எனப்படுகின்ற இராமாநுசர் காலந் தொடங்கித் தோன்றிய மதம் வைணவமதம் என்று சிலரோ பலரோ எண்ணி விடுவதும், சொல்லி விடுவதும் உண்டு. உண்மை அங்ஙனமல்ல. ஆழ்வார் காலத்திலும் அவர்கட்குப் பிறகு நாத முனிகள் என்னும் ஆசாரியருடைய காலத்திலும் தழைத்தோங்கிய மதம் வைணவம். நாதமுனிகள் என்பவர் இராமாநுசர்க்கு முந்நூறு வருடங்கள் முற்பட்டவர். இடையில் ஆளவந்தார் என்கிற பிரபல பண்டிதரான பேராசிரியர் தோன்றி வைணவக் கோட்பாடுகளை உணர்த்தும் பல நூல்களை (வடமொழியில்) இயற்றியுள்ளார். அவ்வாசிரியருடைய சீடர்களை அடிபணிந்து பெரும் புகழ் பெற்றவர் இராமாநுசா. இவர் அவதார புருஷஞகிப் பலபல கலைகளும பயின்று விளக்கில் கொளுத்தின தீவட்டி போல் மிக மேம்பட்டு விளங்கினபடியால் இவரது திருவடிகளை ஆயிரக்கணக்கான சீடர்கள் பணிந்து உய்வு பெற, அன்னவர்கள் முகமாகவும் வைணவம் உலகில் பரவி மிக்க வீறு பெற்றது.

வைணவத்தின் கொள்கையைச் சுருக்கமாகச் சிலர் தெரிந்து கொள்ளவிரும்பிஞல், தத்துவம் இதம் புருஷார்த்தம் எனப்படுகின்ற மூன்றில் வைணவர்களின் சித்தாந்தத்தை உணரப் பெற வேண்டும். பர தெய்வமாகக் கொள்ளப்படுவது எது? அதனை அடையும் வழியாகக் கொள்ளப்பட்டது எது? அடைந்த பிறகு கொள்ளும் பயன் எது? என்கிற இவற்றையறிந்து கொள்வதே தத்துவ. இத, புருஷார்த்த ஞானமெனப்படும். கொள்கைகளை உட் புகுந்து ஆராயுங்கால் பல்வேறு விஷயங்கள் ஒன்றின்மேலொன்ருக வந்து புகும். அவ்வளவு விரிவு வேண்டா இங்கு இம்மூன்றை யுணர்வது போதும்.

ஸ்ரீமந் நாராயணனே பர தத்துவமென்றும், அவனது திருவடிகளைத் தஞ்சமாகப் பற்றுவதே இதமென்றும் ஒழிவில் காலமெல்லாம் உடஞய் மன்னி வழுவிலா அடிமை செய்வதே [அதாவது நித்திய கைங்கரியம் செய்வதே] புருஷார்த்தம் என்றும், நிலையிடுவதே வைணவ ஆசிரியர்களின் ஒருமிடருன சித்தாந்தம். வேதம் முதலிய நூல்களில் தெய்வங்கள் பலபல கூறப்பட்டிருந்தாலும், திருமால் ஒருவரே தெய்வமென்று அறுதியிடுதலும், கருமம் ஞானம் பக்தி... என்றிப்படி பல உபாயங்கள் (வழிகள்) பேசப் பட்டிருந்தாலும் புருடார்த்தமாக வெவ்வேறு பேறுகள் பேசப்பட்டிருந்தாலும் நூற்கொள்கைகளை ஆய்ந்து ஒய்ந்து அறுதியிடவல்ல பேராசிரியர்கள் ஸ்ரீமந் நாராயண மூர்த்தியையே வழிபடு தெய்வமாகவும், சரணுகதியையே தஞ்சமாகவும், அப் பரமபுருஷன் பால் தொண்டு செய்வதையே புருஷார்த்தமாகவும் நிலையிட்டுள்ளார்கள். இத்தகைய அர்த்த விசேஷங்களை உபதேச முகத்தாலும், நூன் முகத்தாலும் நிலை நாட்டினவர்களென்கிற காரணத்திஞல் ஆழ்வார்களும், ஆசாரியார்களும் ஸ்ரீமந் நாராயணமூர்த்தியோடு ஒப்ப ஆதரிக்கப்பட்டு வருகிருர்கள். இச்சம்பிரதாயத்திற்கு இவர்கள் செய்தருளிய உபகாரம் மிகப் பெரியதாதலால் இவர்கள் மகோபகாரர்களென்று குலாவப்படுகிருர்கள். அவரவர்கள் உயிரோடிருக்கும் நாளில் தம்மடி பணிந்தவர்களுக்கு உபதேசங்களை மட்டும் செய்து போனவர்களிற் காட்டிலும், உபதேசமும் பிற்காலத்தவர்களும் நெடுக வாழுமாறு நூல்களைத்தேனும் பாலும் கன்னலும் அமுதமாகப் பொறித்து வைத்தவர்கள் மகோபகாரர்கள் எனப்படுவர். பொய்கையாழ்வார் முதலாகத் திருமங்கையாழ்வார் ஈருகவுள்ள ஆழ்வார்கள் பன்னிருவரும், தமிழ் வேதமென்றும் திவ்விய பிரபந்தங்களென்றும் வழங்கப் படுகின்ற பாசுரங்களைப் பாடி வைத்து மேற்சென்னதக்வஹித புருஷார்த்தங்களை விளக்க வைத்தார்கள் அத்திவ்விவப் பிரபந்தங்களில் மெய்யன்பு பூண்டு அவற்றைக் கண்டபாடஞ் செய்வதிலும், அவற்றின் செழும் பொருள்களை உணர்ந்து பிரவசனஞ் செய்வதிலும் ஊக்கமுடைமை, வைணவர்களுக்கு இன்றியமையாததாம்.

வைணவ சம்பிரதாயப் பேராசிரியர்களான நாத முனிகள் ஆளவந்தார், இராமாநுசர், கூரத்தாழ்வார் படடர் லோகாசாரியர் வேதாந்ததேசிகர் மணவாளமாமுனிகள் முதலான பெரியார்களினுல் பல வழிகளிலும் வளர்க்கப்பட்ட இச்சமயம். இவ்வாசிரியர்கள் அனைவரும் அந்தணர் தலைவராய் அவதரித்து வடமொழி வேதத்தில் ஊன்றினவர்களாயிருந்தும், அந்த வேதத்தின் உண்மைப் பொருள்களைக் கையிலங்கு நெல்லிக்கனியாகக் காட்டிக் கொடுப்பவை ஆழ்வார்களின் திவ்வியப் பிரபந்தங்களே என்று கொண்டு வடமொழி வேதத்தை இடக் கண்ணுகவும், தென் மொழி வேதததை வலக் கண்ணுகவும கொண்டிருந்தார்கள். ''செய்யத் தமிழ் மாலைகள் நாம் தெரியவோதித் தெளியாத மறை நிலங்கள் தெளிகின்ருேமே'' என்று கூறியிருப்பதொன்றே இதற்குச் சான்ருகும்.

வைணவப் பரமாசாரியர் கட்கு ''உபய வேதாந்தப் பிரவர்த்தகாசாரியர்கள் என்பது சிறப்புப் பெயர். வடமொழி வேதாந்தமும் தென்மொழி வேதாந்தமுமாகிய இவையே உபய வேதாந்தம் எனப்படும். உபயவேதமெனினும் உபய வேதாந்தமெனினும் ஒக்கும். வடமொழி மறையிற் கூறின பொருள்களும், தென் மொழி மறையிற் கூறின பொருள்களும் வேறுபாடின்றி, ஒத்திருந்தாலும், வடமொழி மறைப் பொருள்களைத் தெளிவாகக் காட்டுவது தென்மொழி மறை என்பது பற்றியே உபய வேதாந்தப் பேராசிரியர்கள் என்று பிரசித்தி பெற்றவர் வைணவப் பெரியவர்கள்.

இங்கு தத்துவத்தை உணர்த்துகின்றோம். ஆழ்வார்களின் அருளிச் செயலான திவ்வியப் பிரபந்தங்கள் தோத்திர நூல்கள் என்பதில் ஐயமில்லை. ஆனாலும் இவை மற்ற தோத்திர நூல்கள் போலல்லாமல் வேதப் பொருள்கள் கமழ நின்றிருப்பதாலும், பாஞ்சராத்திர நூல்களில் இவற்றை வேதமென்றே எடுத்துக்காட்டி, 'இவை அவதரிக்கப்போகின்றன' என்று கூறியிருப்பதாலும். வைதிகோத்தமர்களான

(5ம் பக்கம் பார்க்க)

[காஞ்சிபுரம் மகாவித்துவான்
பி. ப. அண்ணங்கராச்சாரிய சுவாமிகள் ]

# கடையிற்சுவாமி சிவாலய உற்சவம்

வாலாம்பிகை சமேத வைத்தீஸ்வரப் பெருமான் ஆலயமாகவும் கடையிற்சுவாமிகள் சமாதி உயிர் நிலையமாகவும் விளங்கும் இரட்டைப் பெருமைக்குரியது யாழ் வண்ணை நீராவியடி கடையிற் சுவாமி வீதியில்அமைந்திருக்கும் கடையிற்சுவாமிகள் சமாதிச் சிவாலயமாகும்.

இன்னல்மலிந்த இன்றைய காலகட்டத்திலே பலரும் இறைவனை ஏத்தி வழிபடுகின்ற சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. எனினும் பிரசித்தி பெற்ற சில ஆலயங்கள் கூட வழிபாட்டிலிருந்து விலகிநிற்கின்றன. ஆனுல் 1891-ம் ஆண்டில் சமாதிநிலைபெற்ற கடையிற் சுவாமிகளின் நினைவாக ஏற்பட்டுள்ள சிவாலயம் சனரஞ்சகமான வழிபாட்டுத் தலமாக சமீபத்தில் புதுஎழில் பெற்று விளங்குகின்றது

சிவாலயம் ஒன்றினை நிருவகிப்பது இலேசான காரியமல்ல. ஆயினும் இச்சிவாலயம் இறைவன் பெருங்கருணையால் செவ்வனே நடைபெறுவதற்கு குரு-லிங்க-சங்கமம் மூன்றும் ஒன்றுக்கொன்று இணையாக அமைந்திருப்பதேயாகும்.

இலிங்கமாக விளங்கும் வைத்திய நாதனின் பெருமை தேவியாகிய வாலாம்பிகையின் அருளாட்சி, குருவாக உயிர்நிலைபெற்று என்றும் அருள்வழங்கும் கடையிற் சுவாமிகளின் சிறப்பு அடியார்களாக விளங்கும் இன்றைய வழிபாட்டாளரின் சிந்தனைச் சிறப்பு இவையாவும் சேர்ந்து இவ்வாலயத்தை நாளாந்தம் பலரும் வந்து தரிசிக்கும் புனித தலமாக மாற்றியுள்ளன.

ஈழத்திலே யாழ்ப்பாணம் அதிலே பெரியகடை நாடோறும் பல்லாயிரம் பேர் வருகை தரும் இடம். இப்பெரிய கடையிலே வாழ்ந்து திரிந்து பலரையும் ஆட்கொண்ட பெரு

[5ம் பக்கம் பார்க்க]

## நல்லைச் சேவற் கொடியோன்

ஔவையாரின் திமிரை அன்றடக்க என்றுன்னிக்
கொவ்வையிதழ் வள்ளிபங்கன் குமரன்— செவ்வையாய்
நாவல்மரத் தேறிநின்ற நல்லைச்சே வற்கொடியோன்
மாவல்ல மைபுரிவான் வாழ்த்து.

★

பூமணக்கும் மார்பன் புகழ் நல்லைக் காங்கேயன்
கோமணத் தோடொருநாட் கோபித்துத்
—தாமரத்தைக்
கையேந் திப்பழநிக் கோடியநல் லூராளைக்
கைதொழுவீர் காப்பான் கனிந்து

★

''சுட்ட பழமோ சுடாப்பழமோ வேண்டும்'' என
இட்டமுடன் ஔவையைக் கேட்டசேய்!— நிட்டூரச்
சூரர் குலம் கொன்றொழித்த தூயநல்லை ஐயனவன்
வீரவேல் வெற்றிதரும் வேண்டு.

கவியரசு வெண்பாமணி முருககூரியன்

திமிர்- அகங்காரம் தோமரம்-கைவேல்
[இன்று நல்லூர்க் கந்தன் 18ந் திருவிழா]

## கடைசி நேர வரி விளம்பரம்

### தேவை

காலியிலுள்ள சிவன் கோவிலுக்கு குருக்களும், உதவிக் குருக்களும உடன் தேவை. நேரிலோ, கடித மூலமோ தொடர்பு கொள்ளவும் - சி. சிவசுப்பிரமணியம், 16A ஸ்ராஂலி வீதி, யாழ்ப்பாணம். (சுலைமான் கண்டுவிற்கு முன்பாக) C 4250

### தவறிவிட்டது

இல. 563283610 V. தம்பையா கோபாலகிருஷ்ணன். கீரிமலை வீதி, காங்கேசன்துறை என்பவருடைய அடையாள அட்டை கோண்டாவிலுக்கும் காங்கேசன் துறைக்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேல் குறிப்பிட்டுள்ள விலாசத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும் [C 4286]



வரையறுக்கப்பட்ட ஹற்றன் தேசிய வங்கி

யாழ்ப்பாணக் கிளை முகாமையாளர்

அமரர் எஸ். சூரியகுமாரனுக்கு

## எமது கண்ணீர் அஞ்சலி

— முகாமையாளரும்
— ஊழியர்களும்,
— வரையறுக்கப்பட்ட வர்த்தக வங்கி, யாழ்ப்பாணம்.

(A-1193)



## கண்ணீர் அஞ்சலி

பண்பிற்கும் அன்பிற்கும் உறைவிடமாய்!
பதவியால் உயர்ந்தே பழகுதற்கு இனியவனும்!!
நண்பர்க்கும்மற்றவர்க்கும் உதவ முன்னிற்பாய்!!!
இனியெங்கு உன்னை காண்போம்!!!!
கதறுகிறோம் கண்ணீர் அஞ்சலிகள்!!!!!

**ஹரன் ஜுவலர்ஸ்,**
50, கன்னாதிட்டி,
யாழ்ப்பாணம்.

(A-1196)



## எமதஞ்சலி



யாழ். ஹற்றன்தேசிய வங்கி முகாமையாளர் அமரர் எஸ். சூரியகுமார் மறைவையொட்டி "ஈழநாடு" நிறுவனம் தனதுஅஞ்சலியை தெரிவித்துக் கொள்கிறது.

நிர்வாகி.

(A 1194)



## கண்ணீர் அஞ்சலி

ஹற்றன் நஷனல் வங்கி முகாமையாளர் சூரியகுமார் அவர்கட்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

**Pan Marine Fortune**
**S. A - Panama**
JAFFNA — GREECE

(C-4291)


## 'இந்து' செய்தி

சென்னை, ஆக. 26

ஈழம் தேசிய விடுதலை முன்னணியிலிருந்து தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் விலகிக்கொள்வதற்கு முடிவுசெய்துள்ளதாக 'இந்து' பத்திரிகைச் செய்தியொன்று தெரிவிக்கின்றது

இந்நிகழ்ச்சி ஈழம் தேசிய விடுதலை முன்னணி மேற்கொண்ட ஐக்கிய முயற்சிகளுக்குத் தோல்வியெனவும் 'இந்து' மேலும் தெரிவித்துள்ளது [ஒ]

## பேச்சுக்களை நிறுத்த வேண்டுகோள்

சென்னை, ஆக-26

இலங்கை அரசுடன் பேச்சுவார்த்தைகளை நடத்திக் கொண்டிருக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணி உடனடியாகப் பேச்சுவார்த்தைகளை நிறுத்தவேண்டுமென சென்னையில் இருந்து தமிழீழ மக்கள் விடுதலைக் கழகச் செயலதிபர் திரு க. உமாமகேஸ்வரன் தமிழர் விடுதலைக் கூட்டணியைக் கேட்டுள்ளார். (ஒ)

## அஞ்சலி சுவரொட்டிகள்

மட்டக்களப்பு, செவ்.

வந்தாறுமூலையில் அதிரடிப் படையினருக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு மிடையில் நேற்றுப்பிற்பகல் இடம்பெற்ற நேரடி மோதலின்போது விடுதலைப் புலிகள் தரப்பில் பிரான்சிஸ் திலகம் - ராமு (பாஷையூர்) என்பவர் மரணமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

"வீரமரணமடைந்த பிரான்சிஸ் திலகத்திற்கு எமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்" என்ற வாசகம் பொறிக்கப்பட்ட அஞ்சலி சுவரொட்டிகள் வடக்குக்கிழக்குப் பகுதிகளில் காணப்பட்டன. [மா]

## பிரேத...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

விசாரணை நடத்துமாறு மட்டக்களப்பு பிரஜைகள்குழு செயலாளர் சட்டத்தரணி சாம் தம்பிமுத்து ஜனாதிபதிக்கு அறிவித்துள்ளார். இச்சம்பவம் கொழும்பில் தங்கியிருக்கும் த. வி. கூ. செயலாளர் நாயகம் திரு அ. அமிர்தலிங்கத்தின் கவனத்துக்கும் கொண்டு வரப்பட்டுள்ளது. [மா]

## புதியயோசனைகள்..

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில், "மாகாண சபைகளை அமைத்து அதிகாரத்தைப் பரவலாக்கும் ஆலோசனைகளைத் தயாரிக்கும்போது பூகோள வரலாற்று, ஜனத்தொகை விகிதாசார உண்மைகள் போன்ற சில விடயங்களை அரசாங்கம் ஏற்றுக்கொண்டது" என்றுகூறினர். [ஒ]

## அரிச்சந்திரா நாடகம்

உடுப்பிட்டி, புதன்

பொதுநிதியத்துக்காக நெல்லியடி ம. வித்தியாலயத்தில் இம்மாதம் 30-ம் திகதி நடைபெறவிருந்த சம்பூரண அரிச்சந்திரா நாடக நிகழ்ச்சி பிறிதொரு தினத்துக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

## சொற்பொழிவு

யாழ்ப்பாணம், புதன்

யாழ். நீராவியடி கடையிற் சுவாமி சமாதிச் சிவாலய தேவஸ்தான அலங்கார உற்சவ இலட்சார்ச்சனையை முன்னிட்டு இன்று முதல் ஆத்மஜ்ஜாதி நா. முத்தையா தொடர்ந்து பத்து நாட்கள் மாலை 6 மணிக்கு 'ஈழத்து சித்தர்கள்" என்ற பொருள் பற்றி பேசுவார். [சி]

## படையினர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வருமாறு:

கிளிநொச்சி ஸ்கந்தபுரத்தைச்சேர்ந்த 5 விவசாயிகள் எல்வாஹனென்றில்நெல்மூடைகளை ஏற்றிக்கொண்டு பரந்தனில் வியாபாரிகளுக்குவிற்றுவிட்டு வீடுதிருப்பிக் கொண்டிருந்தனர். முறிகண்டி 1ம் கட்டைக் காட்டுப்பகுதியிலிருந்து இவர்கள்வந்த வாகனத்தை நோக்கி துப்பாக்கிவேட்டுக்கள்தீர்க்கப்பட்டன. 'நாங்கள்அப்பாவிவிவசாயிகள் எங்களைச் சுடவேண்டாம்' என்று அவர்கள் கதறினர்கள். வானை விட்டு ஓடுங்கோ என்று சொல்லிக் காட்டுக்குள் பதுங்கியிருந்த ஆயுதப் படையினர் மீண்டும் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

இதில் எஸ். செல்வேந்திரன் (36 வயது), கே. பரராசசிங்கம் (51 வயது), நி. நடராஜலிங்கம் (26 வயது), ஆர். கலாஷியஸ் (27 வயது) ஆகியோர் படுகாயமடைந்து தங்கள் வானை விட்டு இறங்கி இரத்தம் வழிந்துபாய தப்பியோடினர். மற்றவர் எதுவித ஆபத்துமின்றி தப்பித்துக் கொண்டாராம். இவர்கள் விட்டுச்சென்ற வானுக்குள் நெல் விற்ற பணம் 22,760 ரூபாவும் சாக்குகளும் கிடந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. படுகாயமடைந்தவர்கள் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். [மா]

## வெள்ளி..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கத் தெரியவருகிறது.

இப்பேச்சுவார்த்தை நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை தொடர்ந்து நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் நாளையும் வெள்ளிக்கிழமையும் நடைபெறவுள்ள கலந்துரையாடல்கள் முக்கியத்துவம் வாய்ந்தவையாக இருக்கும் எனக்கருதப்படுகிறது. பின்னர் ஆராய்வதற்கென ஒத்திவைக்கப்பட்ட விடயங்கள் இவ்விருநாட்களும் ஆராயப்படவுள்ளன.

இதேவேளை 'அமிர்' அளித்த பேட்டியொன்றில் இந்தவார இறுதியில் கூட்டணி இந்தியா திரும்பவுள்ளது எனக்கூறியுள்ளார்.

வடபகுதியில் அதிகரித்துள்ள வன்செயல்களினால் தாம் இந்தியா செல்ல உத்தேசிக்கவில்லையெனவும் முன்னரே இதுமுடிவெடுக்கப்பட்டதெனவும் கூறிய 'அமிர்' இந்தியசென்றுமத்திய அரசுடனும் தமிழகத்திலுள்ள தமது கட்சி உறுப்பினர்களுடனும் கலந்தாலோசனைகள் நடத்துவோம் எனவும் கூறினர்.

நாளைமறுதினம் முடிவடையவுள்ள இப்பேச்சுக்களின் போது முடிவெதுவும் எட்டப்படுமென நம்பவில்லை என மேலும் தமதுபேட்டியில் கூறிய அமிர் மீண்டும் அடுத்தகட்ட பேச்சுக்கள் ஆரம்பிக்கையில் தமிழ் போராளிகளும் பங்கு பற்றக்கூடியதாக விரிவாகபேச்சுக்கள் நடத்தப்படும் எனத்தாம் நம்புவதாகக் கூறினர்.


### இன்று முதல் லிடோ

காலை 10-30, 2-30, 4-30, 6-30.

பாக்கியராஜ்-அம்பிகா நடித்த
[கலர், புதிய பிரதி]
**அந்த 7 நாட்கள்**

### வெலிங்டன் வெண்திரையில்

10-30, 2-30, 6-30
Su Sanah York-AlanBates
John Hurt
in
**The Shout**
New Release



ஹற்றன் நஷனல் வங்கி முகாமையாளர்
சூரியகுமாருக்கு

## கண்ணீர் அஞ்சலிகள்

நாங்கள் —
அகால மரணத்துள் வாழ்வது
உண்மைதான் — ஆனால்
இவ்வளவு விரைவில்
நீர் எம்மை விட்டுப் பிரிவீர்
என்று எதிர்பார்க்கவில்லை.
இழக்க முடியாத தொன்றை
இழந்து தவிக்கிறோம்.
சூரியகுமாரா...........
உன் ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திக்கின்றோம்.

**ஆ. க. கனகசபாபதி - சன்ஸ்**
பலசரக்கு வியாபாரம்
106, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(C-4292)



## கலங்குகின்றோம்

அகால மரணம் அடைந்த ஹற்றன் நஷனல் வங்கி முகாமையாளர் S. சூரியகுமார் அவர்களின் குடும்பத்துக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**பின்னையார் ஸ்ரோர்ஸ்,**
31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். (A-1191)

# இன்றைய பலன்

மாதம்: ஆவணி
திகதி: 11 (1986-8-27)
கிழமை: புதன்
திதி: அட்டமி
பி. இ. வரை
நட்சத்திரம்: கார்த்திகை
பி. ப வரை

மேடம்: உறவாடிக் கெடுப்பதற்குப் பகையாளிகள் வருவர். பிரயாணத்தின்போது பொருள் நழுவக்கூடும். கடன் தொல்லை அதிகரிக்கும்.

இடபம்: வாய்வுக் கோளாறினல் அவதிப்படுவீர்கள். எதிலும் ஊக்க மனப்பான்மை உருவாகும். வழக்கு விவகாரங்களைத் தவிர்க்கவும்.

மிதுனம்: பிரிந்தவர்கள் வாழ்க்கையில் இணைவர். குடும்பப் பிரச்னைகளின்மூலம் பொருள் கிட்டும். திடீர்பயணமும் ஏற்படலாம்.

கடகம்: விரக்தி மனப்பான்மை தோன்றும். தொல்லைசள் தலைதூக்கும். அந்நியர் சகவாசம் சங்கடத்தில் மாட்டிவைக்கும்.

சிங்கம்: அன்னையின் ஆசி தாராளமாகக் கிடைக்கும். நீர்த்தொழில் விருத்திக்கிடமுண்டு. இனிமையான சம்பவங்களும் இடம்பெறலாம்.

கன்னி: வாழ்க்கை இன்றுவளமாகும். புத்திர நன்மைக்கிடமுண்டு. மேலிடத்து ஆதரவு கிட்டும். சுபதினம்.

துலாம்: மனப்போராட்டம் அதிகரிக்கும். எதிரிகள் எக்காளமிடுவர். பிறர் விடயத்தில் தலையிடாதிருக்கவும். அமைதி நன்று.

விருச்சிகம்: உறவினர் வருகை உற்சாகமளிக்கும். வருமானத்தில் அபிவிருத்தி காணப்படும். புதிய துறைகளில் நாட்டம் பிறக்கும்.

தனுசு: கடமையில் சோர்வு தெனபடும். பக்கத்தில் படுகுழி. பார்பவர் பகைவர். எவ்விடயத்திலும் விழிப்புடனிருக்கவும்.

மகரம்: கலைஉலகம் சம்பந்தப்பட்டவர்கள் நன்மையடைவர். பெரியவர்கள் உதவிகிட்டும். குடும்ப நலனில் ஆர்வம் பிறக்கும்.

கும்பம்: கருத்தொருமித்த காதலர் வாழ்வு இன்று மகிழ்ச்சி நிறைந்ததாகவிருக்கும். தொழில் மாற்றமும் ஏற்படலாம். சிலருக்கு மனைச் சிறப்புமுண்டு.

மீனம்: பொதுசனத் தலைமையும் கிட்டும். பொதுத்துறையில் நாட்டம் பிறக்கும் குடும்பத்திலும் மகிழ்ச்சி தென்படும். சுமாரான தினம்.

திருமலை
வே. ரவீந்திரன்

## முதலாவது பிறந்ததின வாழ்த்து

### செல்வி கேசவநாதன் கிருபாலினி

முள்ளியவளை 2ம் வட்டாரத்தைசேர்ந்த கேசவநாதன் சிவயோகேஸ்வரி தம்பதிகளின் செல்வப் புதல்வி ''கிருபா'' நாளை (28-08-86) தனது முதலாவது பிறந்த நாளை தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்ருர்.

இவரை அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, தாத்தா, அம்மம்மா மற்றும் உற்ருர், உறவினர், நண்பர்கள் ''கிருபா வீடியோவிஷன்'' ஸ்தாபனத்தினர் அனைவரும் பல்கலையும் பெற்றுடல்லாண்டு வாழ வாழ்த்துகின்றனர்.

அனைவரும் 28-08-86 மாலை 5-00 மணிக்கு கொண்டாட்டத்தில் கலந்து கொள்ளுமாறு வேண்டுகிறேம்.

செ. கேசவநாதன்,
2ம் வட்டாரம்,
முள்ளியவளை,

C 4278

## எச்சரிக்கை

யாழ்ப்பாணம், புதன்

கல்லுண்டாயில்சிப்பி கிண்டி அரித்தவர்கள் ஆனைக்கோட்டை விழிப்புக் குழுவினரிடம் வகையாக மாட்டிக் கொண்டனர்,

இதுபற்றி தெரியவருகையில் கல்லுண்டாய் கடற்கரையை அண்மித்துள்ள பகுதிகளில் அண்மைக்காலமாக பலர் சிப்பி அரித்து வருவதால் அப்பகுதியிலுள்ள வயல்களுக்கும் விளை நிலங்களிலும், குடிமனைகளுக்குள்ளும் கடல்நீர் உட்செல்லும் அபாயம் ஏற்பட்டிருந்தது. இவ்விடயம் குறித்து நவாலி, ஆனைக்கோட்டை விவசாயிகள் எதிர் வரும் காலங்களில் தாம் விவசாயம் செய்ய முடியாதிருப்பதாகவும் பல ஏக்சர் நெற்சாகுபடி செய்யும் காணிகள் பாதிக்கப்பட உள்ளதாகவும் இப்பகுதி விழிப்புக் குழுக்களிடம் முறைபிட்டு வந்தனர்.

இதனைக் கவனத்திற்கெடுத்துக் கொண்ட ஆனைக்கோட்டை விழிப்புக்குழுவினர் அண்மையில் அப்பகுதிக்குச் சென்ற சமயம் அவ்விடத்தில் சிப்பி அரித்துக் கொண்டிருந்த சிலர் இவர்களிடம் மாட்டிச் கொண்டனர். பின்னர் சம்பந்தப்பட்ட நபர்கள் எச்சரிக்கை செய்யப்பட்டதுடன் அவர்களால் அரித்து குவித்து வைக்கப்பட்ட சிப்பியும் பறிமுதல் செய்யப்பட்டது. (எ)

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் அக்ஷய வருஷம் ஆவணி மாதம் 13ம் திகதி [29-8 86] வெள்ளிக்கிழமை காலை 7-41 முதல் 8-53 வரையுள்ள சுப வேளையில்

எமது சிரேஷ்ட புத்திரன்
திருநிறைசெல்வன்
திரிபுவனநாதன் (ரவி)
(தொழில்நுட்ப உத்தியோகத்தர்)
அவர்களுக்கும்

★

எமது சிரேஷ்ட புத்திரி
திருநிறைசெல்வி
இரத்தினேஸ்வரி
(ஆசிரியை)
அவர்களுக்கும்

இறைவன் திருவருளால் மணமகள் இல்லத்தில் திருமாங்கல்யதாரணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அவ்வமயம் தாங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் வேண்டுகின்ரேம்.

இங்ஙனம்
தங்கள் நல்வரவை நாடும்

சி.முத்துலிங்கமும்
(இளைப்பாறிய மக்கள்வங்கிமுகாமையாளர்)
பாரியாரும்
217, ஐயனார் வீதி,
பருத்தித்துறை.

வே.வெங்கடாசலமும்
பாரியாரும்
செட்டியவூர்,
தொண்டமானாறு.

(A1188)

## வதிரி தந்த முத்தமிழ் வித்தகர் டாக்டர் சபா



வதிரிக்கிராமத்தின் அபிவிருத்திக்கும் மறுமலர்ச்சிக்கும் முதன்முதலாக பாடுபட்டவர்களுள் ஒருவரான புரட்சிச் சிந்தனையாளன் காலஞ்சென்ற டாக்டர் வே. அ. கோவிந்தசாமி அவர்களின் ஒரே மகன் அமரர் டாக்டர் கோ. சபாநாதன்

இவர் ஒரு சிறந்த வைத்தியனும் குறிப்பாக தமிழ பற்றும், நாட்டுப்பற்றும் கிராமப் பற்றும் மிகுந்தவர் இவர் திடீர் சுகவீனமுற்றுச் சமீபத்தில் காலமா விட்டார்

இவர் வைத்தியத்துறையில் திறமைசாலியாகவும் யாவராலும் மதிக்கத்தக்கவராகவும் எல்லோருடனும் இன்முகங்காட்டி பழகக்கூடியவராகவும் விளங்கினர். இவரது வாழ்வு இப்படி இடைநடுவில் முடியுமென்றுநாம் நினைத்துக் கூடப்பார்க்கவில்லை. வைத்தியத்துறையில் முன்னேறிய இவர் வரணியூரில் ஸ்ரீ முராரி வைத்தியசாலை என்ற ஸ்தாபனத்தை ஆரம்பித்து திறம்பட செய்து வந்தார். தந்தை வித்திட்ட கிராம ஒருமைப்பாட்டை மென்மேலும் மிளிரச் செய்ய வல்லவரான ஒருவரை நாம் இழந்து விட்டோம்.

முத்தமிழ் வித்தகரான இவர் இயல், இசை, நாடகம் போன்றவற்றில் சிறப்புற விளங்கினர். வதிரி பூவற்கரைப் பிள்ளையார் ஆலய கூட்டுப்பிரார்த்தனை சிறக்க பண்ணிசை இசைக்கும் வல்லவராயிருந்தார். இவ்வாறு அனுதாபம் தெரிவித்து வதிரி தமிழ் மன்றத்தினரும் மற்றும் ஊர்மக்களும் குறிப்பிட்டிருந்தார்கள்.

அன்னரின் ஞாபகார்த்தமாக வதிரி தமிழ் மன்றத்தில் மாணவ மாணவிகளுக்கிடையே அறிவு வளர்ச்சி கருதி சுற்றுவாசிப்புப் பயிற்சி ஆரம்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

அவர் நாமம் வாழ்க.

— திக்கபக்தன்

## கடையிற்சுவாமி

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

வள்ளலே ஈழங்கண்ட மாபெருஞ் சித்தபுருடராகிய கடையிற் சுவாமிகள். அவர் என்றும் உள்ளவர், எல்லாம் வல்லவர்; எல்லாம் அறிபவராகிய இறைவனே யாவர் என்பது சமயம்போதிக்கும் போதனை. அப்போதனையைச் சாதனையில் நிகழ்த்திக்காட்டும் திருத்தலமே கடையிற் சுவாமிச் சிவாலயம். இச்சிவாலயத்தின் தென்பால் தில்லை நடராசர் திருக்கோயிலும் உள்ளது. அதன் மகாகும்பாபிடேகம் சமீபத்தில் அடக்கமாக நடைபெற்றது அதனைத் தொடர்ந்து வருடந்தோறும் நடைபெறும் அலங்கார உற்சவமும் இலட்சார்ச்சனையும் ஹோமமும் இன்று 27 ம் திகதிமுதல் நடைபெறவுள்ளது. இங்கு அவ்வப்போது அன்னதானம் நடைபெறுவது சிறப்பு நிகழ்ச்சி

— பருளாய் விநாயகன்.

★ சேர் கந்தையா வைத்தியநாதன் நினைவுதினம்

## சேர் கந்தையா வைத்தியநாதன் சிவபணியாகினரே!

நேரிசை வெண்பா

கோவைதனி லேயுதித்துக் கேதீஸ் வரம்புதுக்கித்
தேவை அனுதினமுஞ் சிந்தித்தே— சேவைசெய்த
சைத்தொழில் வீடமைப்பு மந்திரிசேர் கந்தையா
வைத்திய நாதன்பேர் வாழ்க!

★

கோப்பாய் பதியிற் குலவுமுடை யார்சுதனய்க்
காப்பான் எனவந்த காவலனும்— சோப்பமில்லாச்
சேர் கந்தை யாவைத்ய நாதனெனுஞ் செம்மலினைப்
பார்தான் மறக்குமோ பார்,

கவியரசு வெண்பாமணி முருககுரியன்

## கிருஷ்ண ஜெயந்தி உற்சவம்

யாழ்ப்பாணம், புதன்

வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள்தேவஸ்தான ஸ்ரீகிருஷ்ண ஜயந்தி உற்சவம் இன்று புதன்கிழமை இரவு நடைபெறும். நாளை மாலை உறியடி உற்சவமும் இடம்பெறும். (சி-எ)

## வல்லிபுர ஆழ்வார் ஆலய கிருஷ்ண ஜெயந்தி

வல்லிபுர ஆழ்வார் ஆலயதில் கிருஷ்ணஜெயந்தி இன்று நடைபெறவுள்ளது. நள்ளிரவு விசேஷ வைபவமாக கண்ணன் பிறப்பும், அபிஷேகமும் நடைபெறும். (ஔ)

## இன்று...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

பிராமண வைஷ்ணவர்களும் ஆதிகாலந்தொட்டு இவற்றை வேத மென்றே வழங்கி வருவதாலும், இவற்றுச்குத் தமிழ் வேதமென்னும் வழக்கு முக்கியமேயல்லது உபசாரத்தினாலாயதன்று, திரிமதஸ்தர்களும் பிரமாணமாக இசைந்துள்ள பாகவதத்தில் பதினோராம் ஸ்கந்தத்தின் முற்பகுதியில் ''ஸ்கலௌகலு பவிஷ்யந்தி நாராயணபராயண......த்ரமிடேஷு'' என்று தொடங்கியுள்ள சுலோகங்களில் தாமிரபரணி, வைகை காவேரி, பாலாறு என்னும் நதிகளையெடுத்துக் காட்டி இவற்றின் கரையில் நாராயண பக்தர்கள் அவதரிக்கப் போகிருர்கள் என்று கூறியிருப்பதும் காணத்தக்கது.

## 4-ம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
செல்லையா முத்துலிங்கம்
தோற்றம்: 17-4-1916
மறைவு: 12-8-1982

அன்புடனும் பாசத்துடனும் வாழ்ந்து எம்மையெல்லாம் ஆருத்துயரில் ஆழ்த்திவிட்டு மீளாததுயில் கொண்ட எம் அன்புத் தெய்வமே! எங்கள் குடும்ப ஒளிவிளக்கே! உங்கள் மதிமுகமும் சொல்லும் செயலும் எங்களால் மறக்கமுடியுமா? நீங்கள் எங்களை விட்டுப்பிரிந்தாலும் உங்கள் நினைவு எங்களை விட்டகலாது.

மனைவி, மகன்,
உறவினர்கள்.
120, பலாலி ரோட்,
திருநெல்வேலி தெற்கு,
யாழ்ப்பாணம்.

(C 4280)

## S. சூரியகுமாரன்

### முகாமையாளர், அட்டன் நசனல் வங்கி, யாழ்ப்பாணம்.

என் இனிய நண்பனே!

பல வருடங்களுக்கு முன் ஓர் இனிய காலைப்பொழுதில் நீ அறிமுகமானுய் அன்று தொட்டு இன்றுவரை நீ செய்த தன்னலமற்ற சேவைகளை என்னல் மறக்க முடியவில்லையே வாழ்வில் ஏற்றத் தாழ்வுகள், இன்ப துன்பங்கள் மாறிமாறி வருவது நியதி, ஆனல் தாழ்விலும் துன்பத்திலும் கைகொடுப்பவர் ஒரு சிலரே அவ்வேளையில் நீ தந்த ஊக்கங்கள், ஆறுதல் மொழிசள் என் நெஞ்சை விட்டகலா. இருள் சூழ்ந்த அக்காலங்கள் மறைந்து சூரியனின் ஒளிககிரணங்கள் தோன்றும் இவ்வேளையில் பறவைகள் சோகசீதம் இசைக்கும் மாலைப்பொழுதில் நண்பனே உனை நான் இழந்தேன் ஈடுசெய்யமுடியாத இவ்விழப்பை என் அன்புக்குரியவனே என்னல் தாங்க முடியவில்லையே. என் இனியவனே நகரில் ஓர் சிறிது கலக்கமேற்பட்டாலும் உன் கடமையைச் செய்துகொண்டு எம்மை அவ்விடத்திலிருந்து அப்புறப்படுத்தும் நீ வங்கி முகாமையாளனின் 24 மணிநேர கடமையுணர்வோடு விடுமுறை நாளிலும் வேலைத்தலத்தைப் பார்வையிட்டுத் திரும்பும் வேளையில் மண்ணில் சாய்ந்தாய் என் நண்பனே இனிய காலைப்பொழுதுகள், அந்திவானம் சிவக்கும் மாலைப்பொழுதுகள்வரும். ஆனல் நீ இல்லாத அப்பொழுதுகள் தென்றல் இல்லா வசந்தங்கள். மரணத்தால் அழிக்கமுடியாதவனே இளவேனில் காலமலர்கள் போல் மணம் பரப்பும் நீ இம்மண்ணின் மணம் உள்ள வரை உன் சேவையால் தளிர்த்திருக்கும் எம்போன்ற உள்ளங்களில் அணையாஜோதியாய் வாழ்வாய் உன் ஆத்மா நிறைவான உணர்வுடன் சாந்தியடையட்டும்.

அன்புடன்,
மனேகரன்.

(C 4281)

# கமரூனில் எரிமலை நச்சுவாயு

# 1200 பேர் பலி; 300 பேர் காயம்!

யுவான்டே, ஆகஸ்ட் 26

**வடமேற்கு ஆபிரிக்காவில் ஏற்பட்ட எரிமலை நச்சுவாயு வெளியேற்றம் காரணமாக 1200 பேர் கொல்லப்பட்டுள்ளனர். 300க்குமதிக மானோர் காயமடைந்தனர். இவ்வருடத்தில் நிகழ்ந்த முதலாவது பெரும் இயற்கை அழிவுச்சம்பவம் இதுவெனத் தெரிவிக்கப்பட்டது**

இந்த எரிமலை நச்சுவாயு அனர்த்தம் கடந்த வெள்ளிக்கிழமை ஏற்பட்டது. இந்த அழிவுக்கான காரணங்கள் இன்னும் தெளிவாக்கப்படவில்லை.

ஆயினும் இந்த எரிமலைப் பகுதிக்கு அருகிலுள்ள ஏரி ஒன்றிலிருந்த நச்சுத்தன்மையே இந்த எரிமலை நச்சுவாயு வெளியேற்றத்துக்கும் காரணம் என்று தெரிவிக்கப்பட்டது.

கமரூன் அதிபர் திரு. போல் பியர். இதுகுறித்து தெரிவிக்கையில், தற்போது நிலைமை கட்டுப்பாட்டுக்குள் இருப்பதாகவும், நிவாரணப்பணிகள் இடம்பெறுவதாகவும் தெரிவித்தார்; வெளிநாட்டு உதவிகளும் எதிர்பார்க்கப்படுவதாக அவர் தெரிவித்தார். கமரூன் தலைநகரான யுவான்டாவுக்கு 400 கிலோ மீட்டர் வடக்கிலுள்ள பிரதேசத்திலேயே இந்த எரிமலை அழிவு ஏற்பட்டது. தற்போது இப் பிரதேசம் ஓர் அழிவுப் பிராந்தியமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இருவருடங்களுக்கு முன்னர் 1984ம் ஆண்டிலும் இப்பகுதியிலுள்ள ஏரியொன்றில் நச்சுக்கசிவு ஏற்பட்டதால் 35 பேர் வரை கொல்லப்பட்டனர். இதுகுறித்து ஆராயும்வகையில் அமெரிக்க நிபுணர் குழுவொன்று அப்போது கமரூன் வந்திருந்தது. ஆயினும் அவர்கள் ஸ்தலத்தை அடையுமுன்னர் இறந்தவர்களின் சடலங்கள் அப்புறப்படுத்தப்பட்டு நிலைமை கட்டுப்பாட்டிலிருந்தது இதனால் ஆராய்ச்சிகளை விரிவாக மேற்கொள்ளமுடியவில்லை.

இத்தடவை இரு அமெரிக்க ஆராய்ச்சிக் குழுக்கள் கமரூன் விரைந்துள்ளன. இக் குழுக்களில் ஒன்று பாதிப்புக்கள் குறித்தும், மற்றையது அழிவுக்கான காரணங்களையும் ஆராயும்.

அமெரிக்க ஆய்வாளர்கள் நேற்று கமரூன் புறப்பட முன்னர் வெளியிட்ட தகவலில், சயனைட் நச்சுவாயுக் கசிவே அந்த எரிமலையிலிருந்தும் கசிந்துள்ளதாகத் தெரிவித்தனர்.

## சோவியத்தின்——

# அணுசக்தி நிலையங்களில் அரைவாசி மூடப்பட்டன!

மாஸ்கோ, ஆக 26

சோவியத் யூனியன் தனது 11 அணுசக்தி நிலையங்களில் அரைவாசியை மூடிவிட்டுள்ளதாக அறிவித்துள்ளது.

ஆஸ்திரியாவின் தலைநகரான வியன்னாவில் அணுசக்தி பாதுகாப்புக் குறித்து இடம்பெற்ற மகாநாடொன்றிலேயே சோவியத் இத்தகவலை வெளியிட்டது.

சேர்நோபில் அணு ஆலை விபத்தையடுத்தே சோவியத் தனது அணுஆலை நிலையங்களில் அரைவாசியை மூடியதாகவும் தெரிவிக்கப்பட்டது

நவீன தொழில் நுட்ப வளர்ச்சிகளுடன் ஒத்துப் போகுமளவுக்கு சீர்திருத்தங்களை மேற்கொள்ளும்வகையிலேயே இந்த அணுஆலைகள் மூடப்பட்டதாகவும் சோவியத் பிரதிநிதி வியன்னா மகாநாட்டில் தெரிவித்தார்.

இந்த ஆலைகள் மூடப்பட்டதையடுத்து தற்காலத்துக்குரிய பாதுகாப்பு நடவடிக்கைகள் விரிவான முறையில் இவைமீது மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

சோவியத்யூனியனில் நிகழ்ந்த சேர்நோபில் அணுஆலை விபத்துக்கு பழமையான பாதுகாப்பு முறைகளே காரணமென்றும் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் இந்த ஆலைவிபத்துக் குறித்த வீடியோ விளக்கமொன்றும் வியன்னா மகாநாட்டில் காண்பிக்கப்பட்டது.

## கர்நாடகாவில் ட்ரக் விபத்து; 14 பேர் பலி!

மைசூர், ஆகஸ்ட் 26

கர்நாடக மாநிலத்தில் நேற்று இடம்பெற்ற ட்ரக் விபத்தொன்றில் 14 பேர் கொல்லப்பட்டனர். 22 பேர் படுகாயமடைந்தனர்.

இரு நகரங்களை இணைக்கும் பிரதான நெடுஞ்சாலை ஒன்றில் இந்த விபத்து இடம்பெற்றதாக அறிவிக்கப்பட்டது

ட்ரக் வண்டியொன்று 80 பேருடன் சென்றுகொண்டிருந்தது. இதனுடன் வேறொரு ட்ரக் மோதியதைத் தொடர்ந்தே விபத்து நிகழ்ந்தது.

காயமுற்ற 22 பேரும் அருகிலுள்ள மருத்துவமனைகளுக்கு விரைந்து கொண்டுசெலலப்பட்டனர்.

## நிர்வாகசபை உறுப்பினர் தெரிவு

யாழ்ப்பாணம், புதன்

ஆலடி ஆனைக்கோட்டை உயரப்புலம் வீதியில் அமைந்திருக்கும் வைரவர் கோவில் நிர்வாகசபைக் கூட்டம் அண்மையில் நடைபெற்றது.

பின்வருவோர் நிர்வாகசபை அங்கத்தவர்களாகத் தெரிவானார்கள். தலைவர்; சி. நவரட்ணம், உப-தலைவர்: செ. சதாசிவம், செயலாளர்; க. பாக்கியநாதன், உப-செயலாளர்: க. சிவநாதன், பொருளாளர்: இ. குமாரசுவாமி, கணக்குப் பரிசோதகர்: சு. சிவப்பிரகாசம் மற்றும் ஒன்பது பேர்கொண்ட செயற்குழுவும் தெரிவுசெய்யப்பட்டது

அனைவரும் ஒன்றிணைந்து ஆலய வளர்ச்சிக்கு பாடுபட வேண்டுமென்று ந. கனகசபை கூட்டத்தில் வலியுறுத்தினர்.

## அஞ்சலி

யாழ்ப்பாணம், புதன்

24ம் திகதி இராணுவத்தினரை எதிர்த்துப் போராடி உயிர் நீத்த தமிழ் ஈழராணுவ போராளிகளுக்கு யாழ் மக்களின் கண்ணீர்அஞ்சலி என்ற ஒரு பிரசுரம் வெளிவந்துள்ளது.

இதில் வீரமரணமடைந்தவர்கள் பிரபா, செல்வம், ரவி, மோகன் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# "அவசியமானால் லிபியாமீது மீண்டும் குண்டு வீச்சு"

வாஷிங்டன், ஆகஸ்ட் 26

அவசியமேற்படின் லிபியா மீது மீண்டும் குண்டுவீசப்படும் என்று வெள்ளைமாளிகைப் பேச்சாளர் ஒருவர் எச்சரித்துள்ளார்.

மேற்கு நாடுகளுக்கு எதிராக, குறிப்பாக அமெரிக்காவின் நேசநாடுகளுக்கு அச்சுறுத்தலாக பயங்கரவாத நடவடிக்கைகளில் லிபியா மீண்டும் இறங்கியிருப்பதாக அப்பேச்சாளர் மேலும்கருத்து வெளியிட்டார்.

இதனைத் தெரிவித்ததையடுத்தே அவசியமேற்படின் லிபியா மீது குண்டுபோடப்படும் எனவும் அவர் கடும் எச்சரிக்கையொன்றை விடுத்தார்.

றீகன் நிர்வாகம் மிகவும் அவதானமாக லிபிய அதிபரின் நடவடிக்கைகளை அவதானித்துவருவதாகவும் அப்பேச்சாளர் தெரிவித்தார்.

இதோ!
தமிழ் ஈழத்தில் சுண்டிக்குளி வாழ் மக்களுக்கு
ஓர் அரிய சந்தர்ப்பம்
உள்நாட்டு வெளிநாட்டு
ரெலிபோன் ரெலெக்ஸ் சேவை
"யாழ். நகர் செல்லவும் வேண்டாம்
ஓயாது வரும் ஷெல்லால் தாக்கமுறவும்
வேண்டாம்"
பாதுகாப்புடன் கூடிய அமைதியான சூழலில்
இரவு-பகல் எந்நேரமும்
உங்களை வரவேற்கக் காத்திருக்கின்றனர்
★ EBANEE ★
"ரெலிபோன் என்றால் எபனி
எபனி என்றால் ரெலிபோன்"
இவைமட்டுமா PASSPORT, BOND,
VISA, AIR TICKET என்பனவும்
உடனுக்குடன் துரிதகதியில் செய்துகொடுப்பதில்
வல்லவர்களும் அவர்களே
இன்றே விரையுங்கள்
எபனி
கொம்யூனிக்கேசன் அன் ரவல்ஸ்,
(கச்சேரி மினிபஸ் நிலையம் முன்பாக),
AR கட்டிடம்,
10, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
ரெலிபோன்:- 24844, 24845. (A 1078)

பிரயாண ஒழுங்குகள்
★ கனடா ★ டென்மார்க்
★ ஜேர்மன் ★ பிரான்ஸ்
ஆகிய நாடுகளுக்கு கொழும்பில் இருந்து நேரடிப் பிரயாணம் மேற்கொள்ள அரிய வாய்ப்பு செல்ல விரும்புவோர் தொடர்பு கொள்ளவும்.
எதிர்வரும் 15-ம் திகதி அழைத்துச் செல்ல இருப்பதால் 15-ம் திகதிக்கு முன் பதிவுசெய்து கொள்ளவும்.
குவைத், அபுதாபி, சவூதி அரேபியா ஆகிய நாடுகளுக்கு வருமானம் பெற ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும்
மேலும் விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்
பாஸ்போட் பொண்ட், டிக்கட் என்பன செய்து கொடுக்கப்படும்
GROUP ATLANTIC
(சிங்கள மகாவித்தியாலயம் முன்பாக)
163, Hospital Road, Jaffna.
(A 1065)

யானைமார்க் குளிர்பானங்கள்
விற்பனையாளர்களுக்கும்
பாவனையாளர்களுக்கும்
மீண்டும் முக்கிய அறிவித்தல்
யாழ்ப்பாணத்தில் விற்பனை செய்யப்படும் யானை மார்க் சோடா வகைள் யானை மார்க் போத்தல்களில் அடைக்கப்பட்டு போலி மூடிகள் (யானை மார்க் அடையாளமில்லாத) போடப்பட்டு யானைமார்க் போலி லேபிள்களுடன் மீண்டும் விற்பனையாகின்றன. இப்போத்தல்களில் அடைக்கப்படும் மென்பானங்கள் சுகாதாரத்திற்கு கேடு விளைவிப்பன. எனவே இப்பானங்கள் எம்மால் விநியோகிக்கப்படவில்லை. இப்பானங்களை வாங்குவதற்கோ அல்லது விற்பனைசெய்வதற்கோ நாம் பொறுப்பாளிகள் அல்ல. நமது மக்களின் நலன்கருதி இதனை வாங்கி அருந்த வேண்டாமென பொதுமக்களுக்கு மீண்டும் பகிரங்கமாக அறிவிக்கின்றோம். மீண்டும்
போத்தல் மூடிகளையும் (யானை மார்க் போட்டது) போலி (உள்ளூர் அச்சு) லேபில்களையும் பார்த்து வாங்கவும்.
பிள்ளையார் ஸ்ரோர்ஸ்
31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
[A1187]

## பிரயாண ஒழுங்குகள்

★ கனடா ★ ஜெர்மனி
★ பிரான்ஸ் ★ கொலண்ட்
★ பெல்ஜியம் ★ டென்மார்க்
★ சுவீடன் ★ ஸ்பெயின்

ஆகிய நாடுகளுக்கு பிரயாண ஒழுங்குகளை மேற்கொள்ளவும்

மற்றும்

பாஸ்போட், பொண்ட் (BOND), விஸா, ரிக்கற் ஆகியனவும் செய்துகொடுக்கப்படும்.

உடன் தொடர்புகொள்ளவும்.

**INTERSUN GROUP,**
சின்னத்தம்பி அவெனியூ,
(மகளிர் கல்லூரி அருகாமை)
மானிப்பாய். (A-1029)



## பிரயாண ஒழுங்குகள்

★ கனடா
★ டென்மார்க்
★ ஜேர்மனி
★ சவூதி அரேபியா

★ கனடா, டென்மார்க், ஜேர்மனி ஆகிய நாடுகளுக்கு எமதுமுகவர் உங்களை எதுவிதஇடையூறுகளுமின்றி நேரடியாக அழைத்துச் செல்வார்.

★ சவூதிஅரேபியாவுக்குமேசன், தச்சு, வீதித்திருத்தம், விவசாயம், தொழிலாளர் போன்ற பதவிகளுக்கு உடன் அனுப்பி வைக்கப்படும். செல்ல விரும்புவோர் 6 படம், பாஸ்போட் என்பவற்றுடன் உடன் தொடர்பு கொள்ளவும். பாஸ்போட், பொண்ட் ஆகியனவும் செய்துதரப்படும்.

★ தீவுப்பகுதி மக்களின் நலன் கருதி எமது கிளை ஸ்தாபனம் ஒமேகா ரவல்ஸ் அன்ட் டூர்ஸ் என்னும் பெயரில் வேலணை வங்களாவடி சந்தியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

தொடர்பு!

**N. BALA,**

பஸ்வழி இலக்கம்: 764, பலாலி வீதி, கோண்டாவில்.
திருச்செல்வம் வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.

**ஒமேகா ரவல்ஸ் அன்ட் டூர்ஸ்**
வங்களாவடிச் சந்தி, வேலணை.

(A 1074)


## மின்இணைப்பு அகற்றப்பட்டது

மாவிட்டபுரம், செவ்.

சட்டவிரோதமின்சாரத்தை அகற்றும்பணியில் காங்கேசன் துறைமின்சாரசபை ஊழியர்கள் ஈடுபட்டு சட்டவிரோத மின்இணைப்புகளை அகற்றினர்கள்.

மாதகல், இளவாலை, விளான் போன்ற பகுதிகளில் கடந்த சிலதினங்களாக இப்பணியில் ஈடுபட்டகாங்கேசன் துறை மின்சாரசபை ஊழியர்கள் 300க்கு மேற்பட்ட சட்டவிரோத மின் இணைப்புகளை அகற்றினர். (எ)

## அரச அதிபரிடம் கோரிக்கை

மாவிட்டபுரம், செவ்.

மயிலிட்டி கடற்றொழில் துறைமுகம் பெரிதும் சேதமுற்று விரைவில் அணைக்கட்டுக்கள் யாவும் கடலால் அடித்துச்செல்லப்படும் அபாய நிலையில் உள்ளது. ஆகவே 1987ம் ஆண்டு மாவட்ட முன்னுரிமைதிட்டநிதி ஒதுக்கீட்டின்போது இத்துறைமுகத்தை புனரமைக்கவும் நிதி ஒதுக்கீடு செய்க''.

இவ்வாறு மயிலிட்டி கடற்றொழிலாளர் நலன்புரிச்சங்கம் யாழ் அரசாங்க அதிபரிடம் கோரியுள்ளது.

வலி. வடக்கு உதவி அரசாங்க அதிபர் யாழ். மாவட்ட கடற்றொழில் விரிவாக்க அலுவலர் ஆகியோர் ஊடாக அரசாங்க அதிபருக்கு அனுப்பியுள்ள மகஜர் ஒன்றிலேயே மேற்படி சங்கம் இவ்வாறு கோரியுள்ளது.

அம்மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது.

''பருத்தித்துறை - குசுமாந்துறை வரையுள்ள கடற்றொழிலாளர்களால் பாவிக்கப்பட்டு வரும் மயிலிட்டி கடற்றொழில் துறைமுகம் சேதமுறுவதை பாராமுகமாகவிட்டால் இப்பகுதி கடற்றொழிலாளர் பாதிக்கப்படுவதுடன் கடற்றொழில் அபிவிருத்தியும் வீழ்ச்சியடைய நேரிடும்.

1984ம் ஆண்டு முதல் இத்துறைமுக புனரமைப்புக் குறித்து குரல் எழுப்பியும் எவ்வித ஆக்கபூர்வமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை ஆகவே இம்முறை மாவட்ட முன்னுரிமைத்திட்ட நிதிஒதுக்கீட்டின் போது இத்துறைமுக புனரமைப்புக்கும் நிதிஒதுக்குமாறு கோருகிறோம்.'' (எ)


## யாழ்ப்பாண அக்கடமி

### க. பொ. த. உயர்தர பரீட்சை
### ஆகஸ்ட் 1987 மீட்டல் வகுப்புகள்

க. பொ. த. உயர்தர பரீட்சைக்கு ஒருமுறையாவது தோற்றிய எவரும் இந்த மீட்டல் வகுப்புகளில் சேரலாம். பாடத்திட்டம் முற்றாக மீட்டல் செய்யப்படும். சேர விரும்புவோர் அக்கடமி காரியாலயத்தில் உள்ள விண்ணப்பப் படிவங்களில் விண்ணப்பிக்கவும்.

வகுப்புகள் 10- 9- 86ல் ஆரம்பமாகின்றன.

அதிபர்,
376, பிரதான வீதி,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
(A 1130) தொலைபேசி எண்: 22617



## பிரயாண ஒழுங்குகள்

★ கனடா ★ டென்மார்க்
★ மேற்கு ஜேர்மனி
★ ஹொலண்ட் ★ பிரான்ஸ்
★ அவுஸ்திரேலியா

ஆகிய நாடுகளுக்கு பயண ஒழுங்குகள் துரித கெதியில் நடைபெறுகின்றது.

★ லண்டனுக்கான பயண ஏற்பாடுகள் பிரத்தியேகமாக ஒழுங்கு செய்யப்படுகின்றது.

மற்றும்

★ பாஸ்போட் ★ பொண்ட்
★ விசா ★ ரிக்கற்

யாவற்றிற்கும் உடன் தொடர்பு கொள்ளுங்கள்.

**ரஜீவன் ரவல்ஸ்**
42, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23665
(A 1076)



## பிரயாண ஒழுங்குகள்

டென்மார்க்
(இடைநிறுத்தப்பட்ட எமது டென்மார்க் பயணம் மீண்டும் ஆரம்பிககப்பட்டுள்ளது)
கொழும்பிலிருந்து நேரடிப் பிரயாணம்
(வாரத்தில் இருமுறைப் பயணம்)

லிபியா – (Labourers)
சவூதி – கிளீனேர்ஸ்
குவைத் – கிளீனேர்ஸ்
ஈராக் – ஆஸ்பத்திரி கிளீனேர்ஸ்

ஆகிய நாடுகளுக்கு வருமான ஒழுங்குகள்
அத்துடன்
பாஸ்போட், பொன்ட், ரிக்கற்றிங் ஆகியனவும் செய்துகொடுக்கப்படும்.

**யூனிவேர்சல் ஏஜென்சி**
125 (455), ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
[ ஆயுர்வேதக்கல்லூரிக்கு அருகாமையில் பெற்றோலியம் கூட்டுத்தாபனத்திற்கு முன்பாக ]
(A 1044)


## யாழ். அபிவிருத்திச்சபை அறிவித்தல்

1986ஆம் ஆண்டு செப்ரம்பர் மாதம் 15ஆம் திகதி காலை 10-00 மணிவரை யாழ். அபிவிருத்திச்சபை பிரதிச் செயலாளர் (நிர்வாகம், சட்டம், வேலைப்பகுதி) அவர்களால் கீழே காட்டப்பட்ட வேலைகளுக்கு, பெருந்தெருக்கள் திணைக்களம், கட்டிடத் திணைக்களம், நீர்ப்பாசனத் திணைக்களம் மற்றும் அரசாங்கத திணைக்களங்கள்/கூட்டுத்தாபனங்களில் கீழ்க் காட்டப்பட்ட வேலைகளின் எதிரே காட்டப்பட்ட தொகைக்கு மேற்பட்ட தொகைக்கு பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களிடமிருந்து சீல் வைத்த கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படும் அன்றைய தினம் காலை 10-10 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். அத்தருணம் ஒப்பந்தக்காரரோ அல்லது அவர்களின் பிரதிநிதிகளோ சமுகமளிக்கலாம்.

கேள்விக்காரர் வைப்புப் பணத்தையும் கிரயப் பணத்தையும் சம்பந்தப்பட்ட யாழ். அபிவிருத்திச் சபை உப அலுவலகத்தில் செலுத்துவதன் பெயரில் 1986ஆம் ஆண்டு செப்ரம்பர் மாதம் 08ஆம் திகதி நண்பகல் 12-00 மணி வரை சம்பந்தப்பட்ட உப அலுவலகங்களில் கேள்விப்பத்திரங்கள் பெற்றுக் கொள்ளலாம்.

| யாழ். அபிவிருத்திச்சபை உப அலுவலகங்கள் | வேலையின் பெயர் | ஒப்பந்தகாரர் பதிவுசெய்யப்பட்ட தொகை (தகைமை) | வைப்புப் பணம் | கிரயப் பணம் |
|---|---|---|---|---|
| 1. நெடுந்தீவு | நூல்நிலையக்கட்டிடம் | 40,000/- | 50/- | 25/- |
| 2. தெல்லிப்பளை | பஸ்நிலையம் அமைத்தல் | 40,000/- | 50/- | 25/- |
| 3. மல்லாகம் | உப அலுவலகக்கட்டிடம் | 100,000/- | 100/- | 50/- |
| 4. மானிப்பாய் (கிராமம்) | கல்லாவலை சங்குப்புலாவை மதகு அமைத்தல் | 30,000/- | 50/- | 25/- |
| 5. கோப்பாய் | உப அலுவலகக் கட்டிடம் | 110,000/- | 100/- | 50/- |
| 6. அச்சுவேலி | சந்தைக் கட்டிடம் | 400,000/- | 250/- | 125/- |
| 7. மானிப்பாய் பட்டணம் | மத்திய சந்தைக்கட்டிடம் | 150,000/- | 125/- | 75/- |
| 8. நாரந்தனை | கண்ணகை அம்மன்கோவிலடி இறங்குதுறை | 150,000/- | 125/- | 75/- |
| 9. நல்லூர் | உப அலுவலகம் 2ஆம் கட்டம் | 75,000/- | 100/- | 50/- |
| 10. கட்டைவேலி | நூல்நிலையம் 1ம் கட்டம் | 120,000/- | 100/- | 50/- |

அன்ரன் அல்பிரட்
பிரதிச் செயலாளர் (நிர் ச. வேலை)
யாழ். அபிவிருத்திச் சபை.

உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம்,
கண்டி வீதி, யாழ்ப்பாணம்.
1986-08-22. (A 1176)

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY

புதன்கிழமை 27-8-86

# "நவ சமசமாஜ கட்சி
# தனியாகப் பிரிந்துபோகும்
# 'சுயநிர்ணய உரிமை'யை ஏற்கிறது"

## —அரசியல்குழு உறுப்பினர் திரு. நீல் விஜயதிலக

யாழ்ப்பாணம், புதன்
"தமிழர்தாம் தனியாகப்பிரிந்து செல்ல அனுமதியளிக்கும் சுய நிர்ணய உரிமையை நாம்ஏற்கின்றோம். இதற்காக பிரிந்துசெல்லத்தான் வேண்டும் என வற்புறுத்த முன்வரப்போவதில்லை. ஒரு இனம் தனது தலைவிதியை தானே தான் தீர்மானித்துக் கொள்ள வேண்டும். அரசியல் மாநாட்டில்கூட தமிழ்மக்கள் விரும்பாத தீர்வு எதனையும் அவர்கள்மேல் திணிக்கக் கூடாது எனவும் வற்புறுத்திப் பேசினேன்."

இவ்வாறு நவசமசமாஜக் கட்சியின் அரசியல்குழுஉறுப்பினரும் இனப்பிரச்னை தொடர்பான அரசியல்கட்சி மாநாட்டில் நவசமசமாஜக் கட்சி சார்பில் கலந்துகொண்டவருமான திரு. நீல்விஜயதிலக நேற்றுநடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் பேசும்போது குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் உள்ள ஐக்கிய தொழிலாளர் சம்மேளன பணிமனையில் நடைபெற்ற இம்மாநாட்டில் நவசவச ஜக் கட்சியின் மற்றொரு அரசியற்குழு உறுப்பினரான திரு. சிறில்துங்க ஜயசூரியாவும் கலந்துகொண்டார்.

நவசமசமாஜக் கட்சியின் யாழ். மாவட்டச் செயலாளர் திரு. ஆ. க. அண்ணாமலையினால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த இப்பத்திரிகையாளர் மாநாட்டில் திரு. நீல்விஜயதிலக மேலும் கூறியதாவது:

விடுதலை செய்யப்பட்ட பிராந்தியத்துக்கு வந்துதங்கி நிற்பதுபோன்ற உணர்வு எமக்கு இங்கு ஏற்பட்டுள்ளது. இங்கு இராணுவத்தினரின் நடவடிக்கைகளை நேரில் பார்க்கமுடிந்தது. தமிழ்ப்போராளிகள் தமது இனத்தின் விடுதலைக்காகப் போராடுபவர்கள் என்பதனையும் காணமுடிகிறது.

மாகாணசபை அமைப்பை தமிழ் மக்களுக்கு வழங்க ஜனாதிபதி முன்வந்துள்ளமை அவர் தமிழ் மக்கள் மேல் கொண்டுள்ள அனுதாபத்தினால் அல்ல ஈழப்போராளிகளை போரினால் வெற்றி கொள்ளமுடியாது என்று அவர் நம்புவதும் தென்னிலங்கையில் உள்ளஇடதுசாரிகள் அரசுக்கெதிராக மேற்கொண்டு வரும் எதிர்ப்புப் போராட்டங்களுக்குத் தாக்குப்பிடிக்க முடியாமல் இருப்பதுமே அவர் இவ்வமைப்பை வழங்க முன்வந்தமைக்கான காரணங்களாகும்.

ஜனாதிபதி ஜே. ஆர். தமிழ் மக்கள் தமது உரிமையானது எனக் கூறும் தாயகம் ஒன்று இருக்கின்றது என்பதனை ஏற்க மாட்டார். தமிழ் மக்கள் தம்மைத் தாம் பாதுகாப்பதற்குப் படைப்பிரிவு அமைத்துக்கொள்ளவும் அவர்சம்மதிக்கப்போவதில்லை. அத்துடன் ஈழ மக்களுக்குத் தேவையான அடிப்படை உள்ளடக்கம் எதுவும் மாகாணசபைத் திட்டத்தில் இல்லை.

தமிழ்ப் போராளிகளின் போராட்டம் வெற்றிபெற வேண்டுமானால் தென்னிலங்கையிலுள்ள நேசசக்திகளுடனும், தொழிலாளர்களுடனும் நல்ல இணக்கம் காண வேண்டும். நகர் புறங்களில் தமிழ்ப்போராளிகள் குண்டுகளைவெடிக்கவைப்பதால் நகர் புறத்தொழிலாளர்கள் தமிழ் போராளிகள் தமது எதிரிகள் என எண்ணுகின்றார்கள். இந்தநிலைமை மாற்றி அமைக்கப்படவேண்டும்.

### "போராட்ட உணர்வை ஏற்கிறோம்"

தமிழ் போராளிகளின் போராட்ட உணர்வை ஏற்றுக் கொள்ளுகிறோம். ஆனால் அவர்களின் தவறான வழிமுறைகளை நாம் ஆதரிக்கவில்லை. எமது கட்சி போராளிகளை விமர்சனம் செய்வதற்கு என்றும் தயங்கியது கிடையாது.

"தனி ஈழம் அமைந்தால் அது மார்க்ஸிச ஈழமாகச் செயல்படும் என நாம் கருதவில்லை. அத்துடன் தனிநாடு அமைத்துத்தான் பிரச்னைகளைத் தீர்க்கலாம்எனவும்நாம் கருதவில்லை." [ச]

## 'புளொட்' பகிரங்கதண்டனை

யாழ்ப்பாணம், புதன்
தமிழீழமக்கள்விடுதலைக் கழகத்தின் (புளொட்) ஒழுங்கை மீறி கொள்ளை நடவடிக்கையில் ஈடுபட்டமைக்காக அவ்வமைப்பைச் சேர்ந்த இருவருக்கு நேற்றுக்காலை ஒருமணித்தியாலம் யாழ் நகரில் பகிரங்க தண்டனை வழங்கப்பட்டது

தமிழீழமக்கள் விடுதலைக் கழகத்தின் தோழர் விஜீ, அதன் ஆதரவாளர் திலீப் ஆகிய இருவரும் இணுவிலில் மேற்கொள்ளப்பட்டவீடியோடெக், மோட்டார்சைக்கில், கொள்ளைதொடர்பாகவேஇத் தண்டனை வழங்கப்பட்டதாக அக்கழகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது

மேலும்தோழர் விஜீ தமது ஸ்தாபனத்திலிருந்து நீக்கி வைக்கப்பட்டுள்ளதாகவும் அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. [மா]

## ஆலோசனைக் கூட்டம்

யாழ்ப்பாணம், புதன்
மட்டக்களப்பு பல்கலைக் கழகத்தில் விவசாயத்துறைக்கு தெரிவு செய்யப்பட்டுள்ள யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மாணவர்கள் மட்டக்களப்பு செல்வதற்கான பிரயாண வசதிகளையிட்டுக் கலந்தாலோசிப்பதற்காக எதிர்வரும் 29ம் திகதி வெள்ளிக்கிழமை யாழ் சென் ஜோன்ஸ் அக்கடமியில் கூட்டமொன்றினை நடாத்தவுள்ளனர். [ ]

## விடுதி வசதி

சுன்னாகம், செவ்.
சுன்னாகம் இணுவில் கிறிஸ்தவ தேவாச்சிரமத்தில் இறையியல் மாணவர்களுக்கான விடுதியினை கிறிஸ்தவ அமெரிக்க மிஷன் இரண்டு லட்சம் ரூபா செலவில் அமைக்க முன்வந்துள்ளது.

இதுவரையில் மேற்படி மாணவர்களுக்கான விடுதி வசதி இல்லாதிருந்ததைத் தொடர்ந்தே தற்போது கட்டிட வேலைகள் ஆரம்பமாகியுள்ளன. (சி)

# மரண அறிவித்தல்

### சண்முகக்குருக்கள் சூரியகுமார்

யாழ்ப்பாணம் ஹற்றன் நாஷனல் வங்கியின் முகாமையாளர் சண்முகக்குருக்கள் சூரியகுமார் அகாலமரணமானார். இவர் கோண்டாவில் மேற்கு ஸ்ரீ மகாகணபதிப்பிள்ளையார் கோவில் காலஞ்சென்ற சு. சண்முகக்குருக்கள் திருமதி ச. பிரசாதம்மாவின், கனிஷ்ட புதல்வனும், ஸ்ரீஸ்கந்தராஜசர்மாவின் (மலேஷியா ஈப்போ) சகோதரரும் நாகேஸ்வரியின் மைத்துனரும், சசிகாந்த், பிரஷாந்த்வின் சித்தப்பாவுமாவார் அன்னாரின் ஈமக்கிரியைகள் கோண்டாவில் மேற்கில் உள்ள அன்னாரது இல்லத்தில் (27-08-86) இன்று புதன்கிழமை பகல் 12 மணிக்கு நடைபெற்று தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார் உறவினர்கள், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: ச. ஸ்ரீஸ்கந்தராஜசர்மா
கோண்டாவில், மேற்கு.

### டாக்டர், கனகசுந்தரம் R. M. B
[இலகடி காரைநகர்]

டாக்டர் V. கனகசுந்தரம் காலமாகிவிட்டார். அன்னார் பூமணியின். அன்புக்கணவரும், விஜேகினி, விஜயகபவன் (U.K), விசாகபவன் (Maldives), கோணேஸ்வரபவன் (கொழும்பு) ஆகியோரின் அன்புத் தந்தையும், கதிரவேற்பிள்ளை A. G. M. (Bank of Ceylon Colombo) சிவதீஸ்வரி, றேனுகாதேவி ஆகியோரின் அன்பு மாமனருமாவார். ஈமக்கிரியைகள் அன்னாரின் இல்லத்தில் 27-8-86 இன்றுபுதன்கிழமை நடைபெற்றுதகனக் கிரிகைக்காக நண்பகல் சாம்பலோடை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும், இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சாம்பு வீதி,
காரைநகர்.
[C 4290]

தகவல்:
பூமணி. கனகசுந்தரம்

### சிவக்கொழுந்து பரமானந்தராசா
(தங்கராசா மாஸ்டர்)

யாழ்ப்பாணம் (தலையாளி) சிவக்கொழுந்து பரமானந்தராசா குவைத்தில் அகால மரணமானார். இவர் யாழ். இந்துக் கல்லூரியின் பழைய மாணவரும், புங்குடுதீவு மகா வித்தியாலயம், வ/பெரியதம்பனை அ. த. க. பாடசாலை ஆகியவற்றின் முன்னாள் ஆங்கில ஆசிரியருமாவார் இவர் சிவக்கொழுந்து பொன்னம்மாவின் அன்பு மகனும், பத்மராணியின் அன்புக் கணவரும், பார்த்திபனின் அன்புத் தந்தையும், நித்தியானந்தராணி, நித்தியானந்தராசா, சத்தியானந்தராசா, சத்தியானந்தராணி, பரமானந்தராணி ஆகியோரின் அன்புச் சகோதரரும், பாலசுப்பிரமணியம், பரமேஸ்வரி, பத்மலோஜினி, சண்முகலிங்கம், பரமநாதன் ஆகியோரின் மைத்துனரும், அனந்தன், அகிலன், அனந்தி, சிவன், லவன், குசன் ஆகியோரின் சித்தப்பாவும், கவிதா, நிரோஜியின் மாமனரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 51/20 சபாபதி வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள இல்லத்தில் 28-8-86 வியாழன் காலை 10-00 மணியளவில் நடைபெறும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: வ. சிவக்கொழுந்து
[C-4285]

# மரண அறிவித்தல்

### ஜேக்கப் தத்துவசிங்கம் பீரிஸ்

யாழ்ப்பாணம் பஸ்நிலைய பீரிஸ் புத்தக நிலைய அதிபர் ஜேக்கப் தத்துவசிங்கம் பீரிஸ் 25-08-1986ல் காலமானார். இவர் திருமதி பெலாமின் பீரிஸின் கணவரும், சந்திரிக்கா, கொட்வின், மஞ்சிரிக்கா, றுேஷான் ஆகியோரின் அன்புத்தந்தையுமாவார். அன்னாரது பிரேத நல்லடக்க ஆராதனை, நேற்று 26-08-86ல் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.
(A 1192)

### திரு. அப்பாக்குட்டி கந்தசாமி

அப்பாக்குட்டி கந்தசாமி காலமாகிவிட்டார். இவர் இளைப்பாறிய உரக்கூட்டுத்தாபன களஞ்சியப் பொறுப்பாளரும், கைலைநாயகியின் கணவரும, தயாபரன், முரளிதரன், கிருபாகரன், சுதாகரன், சுமதி ஆகியோரின் அன்புத்தந்தையும், காலஞ்சென்ற மூளாய் ஆசிரியமணி சோமசுந்தரம் (கந்தையா), திருமதி அன்னபூரணம் கந்தையா ஆகியோரின் அருமை மகனுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் செவ்வாய்க்கிழமை (1986 08-26) அன்று பி. ப. 3-00 மணியளவில் மூளாயில் நடைபெற்றது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மூளாய்,
1986-08-26.
(C4274)

தகவல்
பிள்ளைகளும் மாமியாரும்.

### குழந்தைவேலு – கதிரவேலு

புங்குடுதீவைப் பிறப்பிடமாகக் கொண்டு யாழ்ப்பாணத்தில் வசிப்பவரும், முன்னைநாள் மலேசியா பிரபல வர்த்தகரும், யாழ்ப்பாணம் மலாயன் கபே ஸ்தாபகரும் ஆகிய குழந்தைவேலு - கதிரவேலு அவர்கள் சிவபதமடைந்துவிட்டார். இவர் காலஞ்சென்ற குழந்தைவேலு பொன்னுச்சி, ஆகியோரின் அன்பு மகனும், தெரணியகலை பிரபல வர்த்தகர் காலஞ்சென்ற செல்லத்தம்பி, நல்லம்மா ஆகியோரின் அன்பு மருமகனும், சிவயோகத்தின் அன்புக் கணவரும், சிறீஸ்கந்தராஜா, சிறிசந்திரகாசன், தயாநிதி, சாந்தநிதி இன்பநிதி, சகலகலாநிதி, கிருபநிதி ஆகியோரின் அன்புத் தந்தையும், செல்வநாதன், மகேந்திரன், துரைராசா, பிறேம்குமார், வனஜா ஆகியோரின் அன்பு மாமனும் கிசோர்த்தமன், கீத்தனன், சுகாசினி, அமிர்தவர்சினி, ஜெகஜனனி, மஞ்சுபாஷினி, சஞ்சீவன், கார்த்திகாயினி, அரங்கேசன், மைத்திரேகி ஆகியோரின் அன்புப் பேரனும், சபாரத்தினம், மீனாட்சி, குமாரசாமி, காலஞ்சென்ற அருளையா, செல்லம்மா நல்லதம்பி, இராசம்மா விஜயசித்தப்பி ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற கனகசபாபதி, கனகம்மா துரையப்பா ஆகியோரின் அன்பு மைத்துனரும், இ துரையப்பாவின் அன்புச் சகலனும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் அன்னாரின் 234, நாவலர் வீதி (ஆனைப்பந்தியடி) இல்லத்தில் நடைபெற்று இன்று புதன்கிழமை (27-8-86) காலை 10-00 மணியளவில் தகனக் கிரியைக்காகக் கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் இவ்வறிவித்தலை, உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: க. சிறீஸ்கந்தராஜா (மகன்)
[C-1195]

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1986-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 27-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/1003/81 Eelanadu. P. O. Box 49. Telegram, Eelanadu. Telephone: 22389—24126.